இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 384
சனி, 28 மார்ச், 2026 |
பக்கங்கள் 19
www.ilakku.org

# இலங்கையின் அழியா இராஜதந்திர ‘கறை’

விதுரன்

# கிழக்கில் அதிகரித்து வரும் கொலை சம்பவங்கள்.....!

மட்டுநகரான்





தமிழ்மொழி

# சாபமா சமூக சீர்கேடுகளின் தொடர்ச்சி

# அமெரிக்காவின் இறுதிப் போராகுமா தரையிறக்கம்?

வேல்ஸில் இருந்து அருஸ்

www.ilakku.org | info@ilakku. org | © 2026 இலக்கு இணையம்

# வெளிநாட்டு தூதர்களுடன் பிரதமர் கலந்துரையாடல்



வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதுக்குழுக்களின் தலைவர்களாகப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராஜதந்திரிகள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை மார்ச் 26ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள தர்ஷன எம். பெரேரா, ஆஸ்திரியா மற்றும் PRUN தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி டயனி மெண்டிஸ், எத்தியோப்பியா மற்றும் ஆபிரிக்க ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி என்.ஐ.டி. பரணவிதான, ஈரானுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் எம்.ஐ. பஸீஹா அஸ்மி, இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சமன் குமார சந்திரசிறி மற்றும் பாலஸ்தீனத்திற்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள எம். பாரூக் எம். பௌஸர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுக்குழுத் தலைவர்களுக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இலங்கையின் தேசிய நலன்களை முன்னெடுப்பதில் அவர்களின் பணிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அத்துடன், நாட்டின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதில் அவர்களின் கூட்டுப் பொறுப்பு குறித்தும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

தத்தமது நாடுகள் மற்றும் சர்வதேசத் தளங்களில் நிலையான, தொழில்முறை சார்ந்த மற்றும்

தொடர்ச்சி: பக்கம் 17

## எரிபொருளுடன் இலங்கை வரும் இந்திய கப்பல்!



ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கிடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் படி இன்று (28) நாட்டிற்கு எரிபொருள் கப்பல் ஒன்று வருகை தரவுள்ளது.

20,000 மெட்ரிக் தொன் டீசல் மற்றும் 18,000 மெட்ரிக் தொன் பெட்ரோல் ஆகியவற்றை ஏற்றிய இந்தக் கப்பல் இன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைய உள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இலங்கையின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தியா வழங்கி

தொடர்ச்சி: பக்கம் 17

## ஐ.நா. பிரதிநிதி - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இடையே கலந்துரையாடல்!



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி Marc Andre Franche மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தினருக்கு இடையே வெள்ளிக்கிழமை (27) கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

Marc Andre Franche மற்றும் அவரது குழுவினர் இலங்கை மனித உரிமைகள்

தொடர்ச்சி: பக்கம் 18

# வரலாறு காணாத  எரிசக்தி நெருக்கடியை நோக்கி உலகம் - ரஸ்யா



வரலாற்றிலேயே மிகக் கடுமையான எரிசக்தி நெருக்கடியை நோக்கி உலகம் சென்று கொண்டிருக்கிறது என்றும், ஐரோப்பா அதற்குத் தயாராக இல்லை என்றும் கிரெம்ளின் தூதர் கிரில் டிமிட்ரியேவ் கூறியுள்ளார். மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் மோதல், உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை(26) பேசிய டிமிட்ரியேவ் – இவர் ரஷ்ய நேரடி முதலீட்டு நிதியத்தின் (RDIF) தலைவராகவும், அதிபர் விளாடிமிர் புட்டினின் முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான சிறப்புத் தூதராகவும் உள்ளார் – இது போன்ற ஒரு மோதல் வெடித்தால், ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 100 டாலரைத் தாண்டும் என்று தான் முன்னரே கணித்திருந்ததாகக் கூறினார்.

“அப்போது, யாரும் நம்பவில்லை,” என்று கூறிய அவர், தற்போது சில சந்தைப் பங்கேற்பாளர்கள் விலை 150 டாலர் அல்லது 200 டாலர் வரை உயரக்கூடும் என்ற சாத்தியக்கூறு குறித்து விவாதித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

“மனிதகுல வரலாற்றிலேயே மிகக் கடுமையான எரிசக்தி நெருக்கடி நெருங்கி வருவதை நாம் காண்கிறோம். ஐரோப்பிய ஒன்றியமோ அல்லது ஐக்கிய இராச்சியமோ அதற்குச் சற்றும் தயாராக இல்லை,”. ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிவாயுவை நிராகரித்ததன் மூலம் பிரஸ்ஸல்ஸும் லண்டனும் தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக் கொண்டன, இதன் விளைவுகள் இப்போதுதான் வெளிவரத்

தொடர்ச்சி: பக்கம் 18

## இந்தியா அமெரிக்காவுக்கு ஆதரவு - காஸ்மீர் ஈரானுக்கு ஆதரவு



அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போர் தொடரும் நிலையில், இந்தியாவின் ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேச மக்கள் ஈரான் மக்களுக்குத் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தும் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர்.

இப்பகுதி முழுவதும், மக்கள் தங்கம், பணம், செப்புப் பாத்திரங்கள் மற்றும் பிற மதிப்புமிக்க பொருட்களை நன்கொடையாக வழங்கி வருகின்றனர் என்று ஆர்.டி. இந்தியா செய்தியாளர் ஒருவர் களத்திலிருந்து தெரிவிக்கிறார்.

பள்ளத்தாக்கில், முக்கியமாக ஷியாக்கள் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளில், பல சேகரிப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு, ஏழு வயது சிறுவர்கள் உட்பட அனைத்து வயதினரும், முன்னெப்போதும் இல்லாத வகையில் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தும் விதமாகத் தனிப்பட்ட உடைமைகளை வழங்கி வருகின்றனர்.

அமெரிக்க-இஸ்ரேலியத் தாக்குதல்களில் ஈரானிய உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைக் கண்டித்து இந்தியாவில் நடைபெற்ற மாபெரும் மக்கள் ஆர்ப்பாட்டங்களின் முக்கிய மையமாக காஷ்மீர் விளங்கியது. ஜம்மு மற்றும் காஷ்மீரில்

தொடர்ச்சி: பக்கம் 17

## போரில் ஈரான் வென்று விட்டது - பிரித்தானிய உளவுத்துறை



தற்போதைய போரில், அமெரிக்காவை விட ஈரான் ஆதிக்கம் செலுத்துகிறது. டிரம்ப் தனது ஆரம்ப சாதகத்தை இழந்துவிட்டார். முன்னாள் MI6 தலைவர் அலெக்ஸ் யங்கர் உலக அரங்கில் ஒரு முக்கிய ஒப்புதலை அளித்துள்ளார்.

சமீபத்திய இராணுவ மோதலில், அமெரிக்காவையும் அதன் கூட்டாளிகளையும் விட ஈரான் தெளிவான மேலாதிக்கத்தைப் பெற்றுள்ளது. தெஹ்ரானின் புத்திசாலித்தனமான வியூகம், வாஷிங்டனின் போர் நோக்கங்களைத் தூள் தூளாக்கிவிட்டது என்று அவர் கூறுகிறார்.

தொடர்ச்சி: பக்கம் 06

## பிரித்தானியாவில் முதலாவது பெண் பேராயர் நியமனம்



1534-ல் திருச்சபை நிறுவப்பட்டதிலிருந்து, கேன்டர்பரியின் முதல் பெண் பேராயராக டேம் சாரா முல்லாலியை இங்கிலாந்து திருச்சபை அரியணையில் அமர்த்தியுள்ளது.

புதன்கிழமை(25) கேன்டர்பரி பேராலயத்தில் நடைபெற்ற இந்த விழாவில், இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், இளவரசர் வில்லியம் மற்றும் அவரது மனைவி, வேல்ஸ் இளவரசி கேத்தரின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தனது உரையில், முன்னாள் NHS செவிலியரான முல்லாலி, வரலாற்று ரீதியான துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுப்பதாகவும், பாதுகாப்பு

தொடர்ச்சி: பக்கம் 18

# எமது மண் தியாகங்களாலும் கண்ணீராலும் கட்டமைக்கப்பட்டது

## சிறீதரன் தெரிவிப்பு!

“SRI LANKA’S GOT TALENT” நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தனது அசாத்திய நடனத் திறனை வெளிப்படுத்திய செல்வன் சுதாஸ் ரஜீவன் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.



“யுத்தத்தின் வலியின் உச்சியிலிருந்து சாதனையின் உச்சம் வரை சென்ற எங்கள் சாதனையாளன்” என்ற பொருண்மையில், இராமநாதபுரம் மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சாதனையாளன் மற்றும் அவரைப் பயிற்றுவித்த நடன ஆசிரியருக்கான மதிப்பளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், “எமது மண் வெறும் மணற்பரப்பல்ல; அது தியாகங்களாலும், கண்ணீராலும், குருதியாலும் எழுதப்பட்ட ஒரு வீர வரலாறு. அந்த வரலாற்றின் ஒரு வடுவாக, தனது நான்கு வயதிலேயே யுத்தத்தின் கோரத்தினால் ஒரு காலினை இழந்த சிறுவன் சாதனையை நிகழ்த்தியிருக்கிறான். நான்கு வயது என்பது ஒரு குழந்தை ஓடி ஆடித் திரிய வேண்டிய பருவம். அந்தப் பருவத்திலேயே விதியால் வஞ்சிக்கப்பட்டு, ஒரு காலினை இழந்தபோது, உலகம் அந்தப் பிஞ்சு உயிரைப் பார்த்துப் பரிதாபப்பட்டிருக்கலாம். ஆனால், இன்று அதே உலகம் அவரைப் பார்த்து வியந்து நிற்கிறது.

தனக்கிருக்கும் குறைபாட்டை ஒரு தடையாகக் கருதாமல், தடைகளையே படிக்கட்டுகளாக மாற்றி ‘Sri Lanka’s Got Talent’

தொடர்ச்சி: பக்கம் 17

# இனிப்பு வகை உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படுமா?

பிஸ்கட், ஐஸ்கிரீம், சொக்லேட் உள்ளிட்ட இனிப்பு வகை உற்பத்திப் பொருட்களின் விலைகளை எதிர்வரும் மே மாதம் வரை அதிகரிக்கப்போவதில்லை என இலங்கை இனிப்பு வகை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



நேற்று (26) அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள், வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள உலகளாவிய நெருக்கடி, இலங்கையின் இனிப்பு வகை உற்பத்தித் துறையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் மற்றும் அதனை முகாமைத்துவம் செய்வது குறித்து கலந்துரையாடுவதற்காக அமைச்சர் இந்த சந்திப்பை அழைத்திருந்தார்.

நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிப்பை தற்போதைய சூழலில் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது என அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி: பக்கம் 07

## ஆசிரியர் தலையங்கம் | 28 மார்ச், 2026

# இறைமையுள்ள அரசற்ற தேச இனமான ஈழத்தமிழர் இருப்பை போரின் விளிம்பில் வாழும் இன்றைய உலகில் எவ்வாறு பாதுகாப்பது?

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரோனியோ குட்டரஸ் அவர்கள் “ மத்திய கிழக்கில் நிலவும் மோதல் ஏற்கனவே கட்டுப்பாட்டை மீறிவிட்டது. உலகம் தற்போது ஒரு பெரிய அளவிலான போரின் விளிம்பில் உள்ளது” என்ற உண்மையைக் கூறியுள்ளார்.

இந்நிலையில் உலகநாடுகள் அனைத்துமே தங்கள் மக்களை எவ்வாறு இந்த அனைத்துலக சட்டங்கள் ஒழுங்குகள் முறைமைகள் வழக்குகள் செயலிழந்துள்ள சமகாலத்தில் பாதுகாப்பது என்ற இடர்முகாமைத்துவத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. ஆனால் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை இறைமையுள்ள உலகின் மூத்த குடிகளில் ஒருவராக வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் 22.05. 1972 முதல் அரசற்ற தேசஇனமாக வாழ்கின்ற சூழலில் இன்றைய போரின் விளிம்பில் வாழும் வாழ்வை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பது அவர்களின் உலகளாவிய இனமாக அனைத்துலகிலும் புலம் பதிந்து வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களின் பொறுப்பாகவுள்ளது என்பதை இலக்கு புலம்பதிந்து வாழும் உலக இனமான ஈழத்தமிழர்களுக்கு கவனப்படுத்த விரும்புகிறது.

அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் 48 மணி நேரத்துள் திறக்காது விட்டால் அமெரிக்கா ஈரானின் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் அனைத்தையும் தாக்கியழிக்கும் என முதலில் அறிவித்தார். பின்னர் தாக்கியழிப்பதற்கு மேலும் ஐந்து நாள் அவகாசம் கொடுத்தார். தற்போது மேலும் பத்துநாள் அவகாசம் வழங்குகிறேனென காலநீடிப்புச் செய்துள்ளார். இது நேரடியாக இராணுவத்தினரை தரைவழிப்போரில் பரசூட் தரையிறக்கத்தின் மூலம் ஈடுபடவைத்துப் பின்னர் மத்திய கிழக்கு நாடுகளில் தனக்குள்ள இராணுவத்தளங்களுக்கு ஆட்சேர்ப்பு மூலம் அளவிலான தரைவழிப்போரினைத் தொடர்வதற்கான காலஅவகாசத்தை ட்ரம்ப் கட்டமைத்து வருகின்றார் என்றே ஈரான் கருதுகிறது. இதனை உறுதிப்படுத்தக் கூடிய முறையில் ஈரானின் இரண்டு உருக்கு ஆலைகள் உள்ள நகரங்களையும் யுரேனியம் துகள்கள் உருவாக்கப்படும் மின்னணுவாலையுள்ள இடத்தினையும் அமெரிக்கா வழமை போல் நேற்று வெள்ளிக்கிழமையன்று தாக்கியுள்ள செய்திகள் வெளியாகியுள்ளன.

அதே வேளை ஈரானும் ரஸ்யா மற்றும் சீனாவுடனான Axis of Evasion என ஆங்கிலத்தில் சுட்டப்படும் ஏய்ப்புச் சுழற்சி கூட்டணி மூலம் ஈரானின் ஷாகெட் வகை ட்ரோன்கள் ரஸ்யாவால் உக்ரேன் போரில் பயன்படுத்தப்படுவதால் ரஸ்யாவுக்குள் ஈரானின் தொழில்நுட்பத்தில் ட்ரோன்களை உருவாக்கும் தொழிற்சாலைகள் உண்டு என்பதாலும் சீனாவே ஈரானுடைய ஏவுகணைகளுக்கான திட எரிபொருள்கள் மற்றும் வெடிமருந்துத் தயாரிப்புக்கான வேதியல் பொருட்களை வழங்கி வருவதாகவும் மற்றும் சீனாவின் பேடொ (BeiDou) ஆழமாக ஊடுருவி வேவுபார்க்கும் செயற்கைக் கோள்களே ஈரானின் ஏவுகணைகள் அவற்றின் இலக்கை எட்ட வழிகாட்டுவதாகவும் கூடவே கார்பியா 3 (Garpiya 3) நீண்ட தூர ட்ரோன்களை தயாரிக்க சீன நிபுணர்கள் உதவுவதாகவும் ஆய்வுகள் வெளிவருவது ஈரான் தனியாகப் போரில் ஈடுபடவில்லை என்கின்ற உண்மையை உலகிற்கு உணர்த்துகின்றது.

உக்ரேன் அரசத்தலைவர் ஜெலன்ஸ்கி திடீரென நேரடியாகவே சவூதி அரேபியாவுக்குச் சென்று உக்ரேன் படை நிபுணர்கள் ரஸ்ய ட்ரோன்களை இடைமறித்தழிக்க கையாளும் செயற்கை நுண்ணறிவு முறைமை அமைப்பினை மத்திய கிழக்கு நாடுகளுக்கு வழங்கி அவர்களிடம் இருந்து, அமெரிக்கா போரில் ஈடுபட்டுள்ளதால் பெறக்கடினமாகும் ஏவுகணைகளைப் பெறுவதற்கான பாதுகாப்பு உடன்படிக்கைகளை உருவாக்க முனைந்துள்ளார். அத்துடன் அமெரிக்காவும் தரைவழிப்போருக்கு ஆயத்தமாக மேலும் 10000 படையினரை மத்திய கிழக்கில் குவிக்கிறது. இவையெல்லாம்; இந்தப் போர்கள் தொடர்கதையாக நீளும் அபாயம் உள்ளதென உலகப் போரியல் ஆய்வுகள் கருதுவதால் பெற்றோல் டீசல் போன்ற நாளாந்தப் பயன்பாட்டுக்கான எரிபொருள்களும் இயற்கை எரிவாயுவும் உச்சவிலையினை நோக்கி நாள்தோறும் நகர்கின்றன. எல்லாவிதமான போக்குவரத்து முறைமைகளும் முடங்குவதற்கான நிலை வேகம் பெறுவதால் எல்லாச் சந்தை வழங்கல்களும் செயலிழப்பதால் உலகநாடுகள் எங்கும் பணவீக்கமும் பொருளாதார வீழ்ச்சிகளும் வேலையின்மையும் உணவு மற்றும் மருந்துத் தட்டுப்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லப் போகின்றன.

இந்நிலை இந்தியாவில் எரிபொருள் வழங்கல் பிரச்சினையாகி இந்தியாவின் நாளாந்த வாழ்வையே முடக்கக் கூடிய நிலை ஏற்பட்ட வேகத்திலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரின் நுண்மையான வெளிவிகாரத் திறனால் ஹேர்முஸ் தடைதாண்டி இந்தியாவுக்கு எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் வந்தடைந்ததினால் நிலைமை வழமைக்கு ஒரளவேனும் பேணப்பட்டதுமல்லாமல் சிறிலங்காவுக்கு 38000 மெட்ரிக் தொன் எரிசக்தியினை 20000 மெட்ரிக் தொன் டீசலும் 18000 மெட்ரிக்தொன் பெற்றோலும் உள்ளடங்கலாக கப்பல் வழி அனுப்பி முன்னர் “வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றியது போலவே இப்பொழுதும் இந்த “எரிபொருள் நெருக்கடியில் இருந்து காப்பாற்றியுள்ளது. கூடவே ரஸ்ய வலுச்சத்தி பதில் அமைச்சர் றோமன் மார்~ அவரது தூதுக்குழுவுடன் இரண்டு நாட்களுக்கு இலங்கைக்கு நேரடியாகவே வருகை புரிந்து ரஸ்யாவிடம் இருந்து அரசாங்கம் - அரசாங்கம் என்ற முறைமையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு வலுசக்தி வழங்கலையும் வலுசக்திப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் சிறிலங்காவின் நண்பனாக ரஸ்யாவை முன்னிறுத்தியுள்ளார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மஸாட்டோ கன்டா இலங்கைக்கு வருகை புரிந்து 200 மில்லியன் அவசர கடனுதவியை வழங்கியுள்ளார்.

இவ்வாறு உலக வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் உலக நாடுகளும் சிறிலங்காவுக்கு இலங்கைத் தீவின் அரசாங்கம் என்ற முறையில் தமது தமது தேவைக்கேற்ப அணுவுதற்கு உதவிகளை மேற்கொள்ளுவார்கள். இந்நிலையில் அரசற்ற தேச இனமான ஈழத்தமிழரின் இறைமையையும் தேசியத்தையம் ஒடுக்குவதையே, பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் 04.02.1948 இல் உருவாக்கிய ஈழத்தமிழரின் இறைமையை சிங்களவர்களின் இறைமையுடன் ஈழத்தமிழர்களின் விருப்பின்றி தன்னிச்சையாக சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் இணைத்தது முதலாகக் கடந்த 78 ஆண்டுகளாக தனது அரசியல் கொள்கையாகக் கோட்பாடாகக் கொண்டு ஈழத்தமிழின அழிப்பைப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சி மூலம் வெளிப்படுத்தி வரும் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சி அரசாங்கங்களின் தொடர்ச்சியாக இன்றுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இன்றைய உலகச் சூழ்நிலையைப் பயன்படுத்தி வேகப்படுத்த முயலாவிட்டால் அவர்கள் ஆட்சியை பெரும்பான்மைச் சிங்களவர்களிடையே தொடர இயலாது என்பதால் ஈழத்தமிழர்களின் இருப்பினைப் பேணுவதற்கான செயற்திட்டங்களை முன்வைக்க இயலாதவர்களாகவே ஆட்சியைத் தொடர்வர் என்பதால் ஈழத்தமிழரின் இருப்பு ஆபத்தை எதிர்நோக்கப் போகிறது என்பதையே இலக்கின் கவலையாக அனைத்துலகிலும் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் முன் இவ்வாரத்தில் முன்வைக்க விரும்புகிறது.

இந்நிலையில் இப்போர்க்காலம் உருவாக்கக் கூடிய ஈழத்தமிழரின் மனிதாயத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய இடர் முகாமைத்துவத் திட்டமிடலை அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் உடன் தயாரிக்க வேண்டும். இந்தச் செயற்திட்டங்கள் ஈழத்தமிழரின் சமுகநீதியையும் சமவாய்ப்புகளையும் இந்தப் போர்க்காலத்தில் நிலைப்படுத்துவதற்குரிய முறையில் அமைக்கப்பட வேண்டும். இச்செயற்திட்டங்களை ஈழத்தமிழரின் வரலாற்றுத் தாயகத்தில் நடைமுறைப்படுத்தவதைச் சிறிலங்காவின் இன்றைய ஆட்சியாளரான தேசிய மக்கள் சக்தி தடை செய்யாதவாறு இந்த ஈழத்தமிழர் இருப்பைப் பாதுகாப்பதற்கான தேசிய மக்கள் சக்தியின் ஒத்துழைப்பே அவர்கள் கூறும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும், அவர்கள் எதிர்பார்ப்பதாக அவர்கள் கூறும் உண்மையான “மாற்றத்தையும்” இலங்கைத் தீவின் அரசியலில் கொண்டு வந்து இலங்கைத் தீவில் வாழும் சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லீம்கள் மலையக மக்கள் மற்றும் சிறு சமுதாயங்கள் அனைவருக்கும் சட்டத்தின் முன் சமத்துவ வாழ்வையும் கூட்டான பொருளாதார வளரச்சிகளையும் நடைமுறையாக்க உதவும் “அரசியல் உளவியலை” வளர்த்து மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக் கூடிய ஒருவருக்கு ஒருவர் உதவக்கூடிய பகிர்வுகளை மக்கள் மேற்கொள்வதற்கான சமுக உறவுகளை வளர்க்கும் என்பதை தெளிவாக்கக் கூடிய அணுகுமுறைகளை செயற்திட்டங்களில் துறைசார் நிபுணர்களைக் கொண்டு கட்டமைத்து அதற்கான மதியும் நிதியும் தொடர்வதற்கான முறைமைகளும் தெளிவாக்கப்பட வேண்டும் என்பதே இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**



# இலங்கையின் அழியா இராஜதந்திர ‘கறை’

## விதுரன்

இந்தியப் பெருங்கடலின் புவிசார் அரசியல் வரைபடத்தில் இலங்கையொரு சிறிய தீவாக இருந்தாலும், தீவு தேசங்கள் வல்லரசுகளின் அதிகாரப் போட்டியால் சிதைக்கப்படுவதற்கு ‘ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா’ கப்பல் விவகாரம் வரலாற்றுச் சான்றாக மாறியிருக்கிறது.

‘நடுநிலைமை’ என்ற போர்வையில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் வெளியுறவுக் கொள்கையானது வெறும் கண்துடைப்பு என்பது அப்பட்டமாக வெளிச்சத்துக்கு வந்துள்ள நிலையில் சர்வதேச அரங்கில் ‘இலங்கையின் நடுநிலைமை’ கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.



அதுமட்டுமன்றி, ஏகாதிபத்திய வாதம் பேசியவர்கள் ஆட்சியில் அமர்ந்திருக்கின்ற நிலையில் அவர்களின் இராஜதந்திர முதிர்ச்சியற்ற தன்மையையும், அழுத்தங்களுக்குப் பணியும் பலவீனத்தையும் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டியுள்ளது.

இந்த விவகாரத்தின் ஆணிவேராக இருப்பது ஈரானியக் கப்பல்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்புதான். இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற ‘மிலான் - 2026’ சர்வதேச கடற்படைப் பயிற்சியின் போது, இலங்கையின் 26ஆவது கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொட ஈரானியக் கப்பல்களை இலங்கைக்கு வருமாறு ‘நட்புறவு விஜயம்’ என்ற அடிப்படையில் அழைப்பு விடுத்திருந்தார்.

இதனை இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் அலிரெஸா டெல்கோஷ் கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பில் மிகத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளார். அதுமட்டுமன்றி கடற்படைத் தளபதியுடனான உரையாடலில் விசாகப்பட்டனத்தில் வைத்து ஈரானின் கப்பற்படைத் தளபதியை பக்க நிகழ்வில் சந்தித்ததையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இருப்பினும், இந்த உண்மையை இலங்கை அரசாங்கம் ‘அரசாங்கமாக’ மறைக்க முற்பட்டமையானது பாரிய இராஜதந்திரத் தவறாகும். முதலில் ஈரானியக் கப்பல்களுக்கு ‘அழைப்பு விடுக்கப்படவில்லை’ என்று பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்தும், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும் ஈரானிய கப்பல் தாக்கப்பட்ட அன்றைய தினமே தெரிவித்தனர்.

அதன்பின்னர் ‘பொய்கள் என்றால் சபையில் கூறுவேன். உண்மைகளை பொதுவெளியில் கூறுவேன்’ என்று குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது பெப்ரவரி 26 ஆம் திகதி ஈரானிய கப்பல்களுக்கு அனுமதி கோரப்பட்ட அதேவேளையில், அமெரிக்காவும் தனது ஏவுகணைகள் பொருத்தப்பட்ட போர் விமானங்களை மத்தளத்தில் தரையிறக்க அனுமதி கோரியதாக தெரிவித்தார்.

அத்துடன் தலா எட்டு எவுகணைகள் பொருத்தப்பட்ட இரு அமெரிக்க விமானங்களுக்கு அனுமதி மறுத்ததன் மூலம் தனது அரசாங்கம் ‘நடுநிலை’ வெளிவிவகாரக் கொள்கையின் பிராகாரம் செயற்பாட்டை முன்னெடுத்ததாக மார்பு தட்டிக்கொண்டிருந்தார்.

ஆனால் கொழும்பில் ஊடகவியலாளர் சந் திப்பை நடத்திய இலங்கைக்கான ஈரானிய தூதுவர் அலிரெஸா டெல்கோஷ் ‘இந்தியாவின் விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெற்ற ‘மிலான் 2026’ நிகழ்வில் பங்கேற்ற ஐ.ஆர்.ஐ.எஸ் டெனா, ஐ.ஆர்.ஐ.எஸ் புஷெர் மற்றும் ஐ.ஆர்.ஐ.எஸ் லவன் ஆகிய ஈரானுக்குச் சொந்தமான கப்பல்களை நட்புறவு விஜயம் என்ற அடிப்படையில் இலங்கைக்கு வருகைதரும்படி அந் நிகழ்வில் வைத்து இலங்கை கடற்படைத் தளபதியினால் அழைப்புவிடுக்கப்பட்டது என்பதை மிகத்தெளிவாகக் கூறினார்.

அத்துடன் குறித்த அழைப்புக்கு அமைவாகவே அக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பை நோக்கி வருகை தந்தன. அக்கப்பலில் இருந்தவர்கள் தாக்குதலை எதிர்கொள்வதற்குத் தயாராக ஆயுதங்களுடன் இருக்கவில்லை. அது மாத்திரமன்றி அமெரிக்காவின் அத்தாக்குதலில் மரணித்தவர்களில் பலர் படைவீரர்கள் அல்ல. மாறாக அவர்கள் சக்ஸபோன் உள்ளிட்ட இசைக்கருவிகளை இசைப்பவர்களாவர்’ என்பதையும் வெளிப்படுத்தினார்.



ஈரானிய தூதுவர் அலிரெஸா டெல்கோஷின் பகிரங்கமான மேற்படி கூற்றுக்களை தற்போது இலங்கையால் இலகுவாக தட்டிக்கழித்துவிட முடியவில்லை. இதனால் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ‘இலங்கைக்கு வருகைத் தருமாறு ஈரானிய கப்பலுக்கு இராஜதந்திர மட்டத்தில் எவ்விதமான உத்தியோகபூர்வ அழைப்பும் விடுக்கவில்லை. மரபு ரீதியான நட்பு அழைப்பே விடுக்கப்பட்டது. இலங்கைக்கான ஈரானிய தூதுவர் பற்றி கருத்து தெரிவிப்பதற்கு தயாரில்லை’ என்று கூறி கையை விரித்துவிட்டார்.

அழைப்புக்களின் வடிவங்கள் எவ்வாறாக இருந்தாலும் இலங்கை கடற்படைத் தளபதியால் ஈரானிய கப்பல்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பது உறுதியானது. அதனடிப்படையில் தான் ஈரானின் மூன்று கப்பல்களும் பெப்ரவரி 26ஆம் திகதி இலங்கை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளன.



அன்றையதினமே காலையிலேயே மூன்று ஈரானிய கப்பல்களும் கொழும்பு துறைமுகத்தில் மார்ச் 09-13 வரையில் நிறுத்துவதற்கு அனுமதி கோரப்பட்டும் உள்ளது. விசாகப்பட்டினத்தில் இருந்து சுமார் மணிக்கு 70 - 80 நாட்டிக்கல் மைல் வேகத்தில் பயணித்தால் கூட மூன்று முதல் நான்கு நாட்களுக்குள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைய முடியும்.

ஆனால் ஈரான் கப்பல்கள் இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு தங்கியிருப்பதற்கு திட்டமிட்டுள்ளன என்பது அவர்களின் கொழும்பில் நங்கூரமிடுவதற்காக கோரிய திகதிகள் வெளிப்படுத்தியுள்ளன.

அதேநேரம் பெப்ரவரி 26ஆம் திகதி பிரவேச அனுமதி கோரப்பட்ட நிலையில் மார்ச் நான்காம் திகதி (அமெரிக்க நீர்மூழ்கியால் தாக்குதல் நடத்தப்பட்ட நாள்) வரையில் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை நாட்டின் கடற்படைத்தளபதியால் நட்பு பயணத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்ட கப்பல்களை அனுமதிப்பதற்கு சுமார் ஒருவாரம் தாமதிக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் ஆழமாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

அடுத்ததாக, 9ஆம் திகதி கொழும்பில் நங்கூரமிடுவதற்கு அனுமதி கோரியிருந்த கப்பல்கள் நெருக்கடியான நிலைமைகளை உணர்ந்த நிலையில் தான் பொருளாதார மண்டலத்திற்குள் நின்றவாறு கொழும்பு துறைமுகத்திற்குள் நுழைவதற்கு அவசரமான அனுமதி கோரப்பட்டு 11 மணிநேரம் இழுத்தடிக்கப்பட்டும் உள்ளது.

‘நட்புறவு விஜயத்திற்கு’ அழைக்கப்பட்ட கப்பல், தனது பிரத்தியேக பொருளாதார மண்டலத்துக்குள் இருக்கும்போது அதற்குப் பாதுகாப்பு வழங்கத் தவறியது அல்லது அனுமதி வழங்கத் தாமதித்தது இலங்கை மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகின்றது.

சர்வதேச கடல் சட்ட உடன்படிக்கையின்படி, ஒரு நாட்டின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் மற்றொரு நாட்டின் போர்க்கப்பல் மீது தாக்குதல் நடத்துவது அந்த கடலோர நாட்டின் இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்.

தொடர்ச்சி: பக்கம் 14

# தந்தைசெல்வாவின் இலக்கு ஒன்றுதான் அது இனத்தின் விடுதலை.!



தந்தை செல்வாஎன அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் 1898,மார்ச்,31.ல் பிறந்து 1977,ஏப்ரல்,26,ல் இயற்கை அடைந்தார். அன்னாரின் 128, வது ஜனன தினம் எதிர்வரும் 2026,மார்ச்,31,ம் நாளாகும்.



பா.அரியநேத்திரன்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அங்குரார்ப் பணம் 1949,டிசம்பர்,18,ம் திகதி மு.ப.9.30, மணிக்கு கொழும்பு மருதானை அரசாங்க லிகிதர் சேவை சங்கக் கட்டிட அறையில் தந்தை செல்வா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் "இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி" தோற்றம் பெற்றது. அந்த கூட்டத்தில் டாக்டர். இ.மு.வி.நாகநாதன், திரு. கு.வன்னியசிங்கம், டாக்டர்.எம். திருவிளங்கம்,உட்பட பலர் சமூகம் கொடுத்திருந்தனர்.

தலைவராக தந்தை செல்வா அவர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். அன்று தமிழரசு கட்சி உருவாக்கிய அங்குராப்பணக்கூட்டத்தில் தந்தை செல்வா ஆற்றிய தலைமை உரை "மன்னராட்சி நிலவிய காலங்களில் ஒரு நாட்டின் சரித்திரம் அந்நாட்டை ஆண்ட மன்னர்களின் வரலாறாகவே எழுதப்படும்.

மக்களாட்சி மலர்ந்த பின் மக்கள் சக்தியை திரட்டிச் செயற்பட்ட அரசியல் இயக்கங்களின் வரலாறே நாட்டின் சரித்திரமாக அமைகிறது.

அக்கண்ணோட்டத்தில் அரசியல் கட்சிகளின் தோற்றம்,வளர்ச்சி,சமுதாயத்தில் அவற்றின் தாக்கம், அவற்றின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், சாதனைகள், ஆகியன அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை.

இலங்கையில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஸ்தாபனமாக அமைக்க வேண்டுமென்னும் தனி நோக்கத்துடன் யாங்கள் எல்லோரும் இன்று கூடியிருக்குறோம்.

இப்போதிருக்கும் நிலையில் யாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திர தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது இது எமது திடமான நம்பிக்கையாகும்"

இதுதான் தந்தை செல்வா 1949,டிசம்பர்,18,ல் ஆற்றிய முதலாவது கட்சி தலைமை உரை. இதனை உறுதிப்படுத்தி முதலாவது இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி மாநாட்டை திருகோணமலையில் 1951 ஏப்ரல் 13, 14, 15 ஆம் திகதிகளில் நடத்தி அம்மாநாட்டில், தமிழ் பேசும் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்றும், சிங்களவர்களுடன் சமஷ்டி அடிப்படையில் இணைந்து வாழ விரும்புவதாகவும் பிரதான தீர்மானத்தை தந்தை செல்வா நிறைவேற்றினார் சமஷ்டி கொள்கை இருந்தமையால் சமஷ்டிக் கட்சி என்ற பெயரையும் தமிழரசுக்கட்சி பெற்றது. ஈழத்தமிழர்களுக்கான தலை நகர் 'திருகோணமலை' என்பதும் அந்த மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

இந்த சமஷ்டிக்கொள்கைக்காக 1949, தொடக்கம் 1976, வரையும் 27, ஆண்டுகள் அறவழிப் போராட்டங்கள், மாநாடுகள், பேச்சுக்கள், ஒப்பந்தங்கள் எல்லாம் செய்தும் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் 10, வது தேசிய மகாநாடு 1966, யூலை 23.24,25, ஆகிய மூன்று தினங்கள் கிழக்கு மாகாணம் கல்முனையில் டாக்டர் இ.மு.வி.நாக நாதன் தலைமையில் இடம் பெற்ற போது இறுதி நாள் (25/07/1966) அப்போது பிரதமராக இருந்த ட்ட்லி சேனநாயக்காவை பிரதம விருந்தினராக அழைத்து மேடையில் ஏற்றி அவர் மூலமாகவேனும் அரசியல் தீர்வை பெறலாம் என தந்தை செல்வா முயன்றார்.

அந்த மகாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ட்ட்லி சேனநாயக்கா "நான் இலகுவில் வாக்கு கொடுக்கமாட்டேன் வாக்கு கொடுத்தால் அதை நிறைவேற்றாமல் விட மாட்டேன்" என கூறினார் அவர் தமிழ்மக்களுக்கான அரசியல் உரிமையை வழங்குவேன் என்று அந்த மகாநாட்டில் வாக்கு கொடுத்தார் கூறினார் அந்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றவில்லை என்பது பின்னர் தெரியவந்தது.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் தேசிய மாநாட்டில் இலங்கை பிரதமர் ஒருவரை அழைத்து மேடையில் உரையாற்றவைத்த மாநாடு இதுவாகும் இதற்கு முன்னமோ, இன்றுவரையோ எந்த மாநாட்டிலும் இவ்வாறு ஸ்ரீலங்கா பிரதமர் எவரும் அழைக்கப்படவில்லை.

இப்படி விடுதலைக்காக பல வழிகளை 1949, டிசம்பர்,18, தொடக்கம் 1976, மே,14,வரை சமஷ்டிக்கொள்கைக்காக 27, வருடங்களாக செய்து பார்த்து உழைத்த தந்தை செல்வா ஏமாற்றம் அடைந்து இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியையும், அதன் பிரதான சமஷ்டிக்கொள்கையையும் அப்படியே (கைவிட்டு) மௌனிக்க விட்டு விட்டு 1972, மே,04, ல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், கணபதி காங்கேஜர் பொன்னம்பலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி,எஷ்.ஜே.வி. செல்வநாயகம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோரால் ஆரம்பித்த "தமிழர் கூட்டணி" என்ற கட்சியின் பெயரை மாற்றி 1976,மே,14,ல் "தமிழர் விடுதலைக்கூட்டணி"என புதிய பெயரை சூட்டி அந்த கட்சி மூலமாகவே வட்டுக்கோட்டை தீர்மானமாக "சுதந்திர தமிழீமே ஒரே தீர்வு" என தந்தை செல்வா நிறைவேற்றினார்.

தந்தை செல்வா 1976, மே,14, ல் வட்டுக்கோட்டை தீர்மானம் எடுப்பதற்கு சரியாக 09, நாட்களுக்கு முன்பு 1976, மே,05, ல் "தமிழீழ விடுதலைப்புலிகள்" இயக்கத்தை உத்தியோகபூர்வமாக தலைவர் பிரபாகரன் ஆரம்பித்தார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்,

வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய தந்தை செல்வா சரியாக 11, மாதம் 12, நாட்களால் 1977,ஏப்ரல்,26,ல் இறைபதம் அடைந்தார்.

அவர் மரணம் அடைந்து சரியாக 02, மாதம்,25, நாட்களால் 1977, யூலை,21, ல் நடைபெற்ற தொகுதிவாரியான இறுதித்தேர்தலில் வட்டுக்கோட்டை தீர்மானத்தை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடகிழக்கில் 23, தொகுதிகளில் முன் வைத்து பிரசாரம் மேற்கொண்டு "தமிழீழம் வேண்டுமானால் உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்" என்ற கொஷத்துடன் அந்த தேர்தல் இடம்பெற்றது அதில் 18, தொகுதிகளில் தமிழ் மக்கள் தமிழீழத்துக்காக ஆணை வழங்கியிருந்தனர்.

வடகிழக்கில் முஷ்லிம் மக்கள் அன்றே தமிழீழத்துக்கு ஆணைவழங்கவில்லை என்பதே வரலாறு. தமிழர் விடுதலைக்கூட்டணியால் முஷ்லிம் வேட்பாளர்களை நிறுத்திய கல்முனை-ஏ.எம்.சம்சுதீன், சம்மாந்துறை-எச்.எல். எம்.ஹாசீம், மூதூர்-எஷ் .எம்.மக்கீன். ஆகிய மூன்று தொகுதிகளிலும் படுதோல்வி அடைந்து எந்த ஒரு முஷ்லிம் வேட்பாளரும் வெற்றிபெறவில்லை அதேபோல் கல்குடா தமிழ் முஷ்லிம் மக்கள் வாழும் தொகுதியும் படுதோல்வி கண்டது. வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு அப்போதே முஷ்லிம் மக்கள் ஆணைவழங்கவில்லை என்ற கசப்பான உண்மையை புரியவேண்டும்.

இதற்கும் காரணம் 1977, தமிழர் விடுதலைக்கூட்டணி விட்ட தவறு என்பதே உண்மை. மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் முஷ்லிம் பிரதிநித்துவத்தை இல்லாமல் செய்ய செல்லையா இராசதுரையை தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்திலும், காசி ஆனந்தனை இலங்கை தமிழ் அரசுக்கட்சி வீட்டுச் சின்னத்திலும் தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமை வேட்பாளர்களாக இரண்டு தமிழர்களை போட்டியிட வைத்தமையால் முஷ்லிம்மக்கள் தமிழர் விடுதலை கூட்டணி மீது கொண்ட அதிருப்தியால் கல்முனை, சம்மாந்துறை, மூதூர் ஆகிய மூன்று தொகுதிகளிலும் வட்டுக்கோட்டை தீர்மானம் தோல்வியடைந்தது என்பதே உண்மை.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் செல்லையா இராசதுரையை பழிவாங்க அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எடுத்த முயற்சியின் விளைவே இதுவாகும்.

தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் எடுத்த தீர்மானத்துக்கு வடகிழக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை தந்தை செல்வா அறியும் முன்னே அவர் கண்மூடினார்.

தந்தை செல்வா என்ற ஒரு பெரும் தலைவர் ஈழத்தமிழர்களுக்காக இரண்டு கட்சிகள் மூலம் இரண்டு தீர்மானங்களை எடுத்திருந்தார்.

1. **இலங்கைத்தமிழ் அரசுக்கட்சிமூலமாக 1949, டிசம்பர்,18, ல் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு.**
2. **தமிழர் விடுதலைக்கூட்டணி மூலமாக 1976, மே,14, ல் சுமந்திரதமிழீழம்.**

இந்த இரண்டு தீர்மானத்துக்கும் சொந்தக்காறர் தந்தை செல்வா ஆனால் இரண்டு தீர்மானமும் இரண்டுகட்சிகளால் எடுக்கப்பட்டது.

இதைத்தான் நாம் பார்க்கவேண்டும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கொள்கை எது என்றால் அது சமஷ்டிக்கொள்கை என்பது சரி,

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொள்கை எது என்றால் தமிழீழதனியரசு இதுதான் இரண்டு கட்சி ரீதியான கொள்கை என்பதை புரிதல் வேண்டும்.

ஆனால் தந்தை செல்வாவின் கொள்கை எது. ? இந்த கேள்விக்கான பதில் தந்தை செல்வா இறப்பதற்கு 02,மாதங்கள்,25, நாட்களுக்கு முன்னம் வட்டுக்கோட்டையில் எடுத்த இறுதித்தீர்மானமான சுதந்திர தமிழீழமே தந்தை செல்வாவின் கொள்கையாகும் சமஷ்டிக்கொள்கையை தந்தை செல்வா 1976, மே,14,ல் கைவிட்டுவிட்டார் என்பதே உண்மை.



சிலர் கூறுவது தந்தை செல்வா சாகும் போது "தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என கூறியே இறந்தார் என இதுவும் தவறு அவர் சாவடைவதற்கு ஆறுவருடங்களுக்கு முன்னமே 1972இல் புதிய இலங்கை குடியரசு அரசியல் யாப்பினை நிராகரித்து நாடாளுமன்றப் பதவியை துறந்தார் அந்த காலத்தில்தான் தந்தை செல்வா தமிழரகளை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என கூறியிருந்தார்.

தந்தை செல்வா சாகும் போது இறுதியாக கூறியது வட்டுக்கோட்டை தீர்மானமான "சுதந்திர தமிழீழமே இறுதித்தீர்வு" என்பதையே தந்தை செல்வா பகிரங்கமாக கூறி இறந்தார் என்பதே வரலாற்று உண்மை.

வரலாறுகளை சிலர் தவறாக மாற்றி தந்தை செல்வா சாகும்போது தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என கூறி இறந்தார் என்பது முற்றிலும் பொய்யான கருத்தாகும்.

எனவே தந்தை செல்வாவானாலும், தலைவர் பிரபாகரன் ஆனாலும் இரண்டு தலைவர்களினதும் இலக்கு ஒன்றுதான் அது இனத்தின்விடுதலை மட்டுமே என்பதே உண்மை.

• • •




**அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி மற்றும் இலக்கு மின்னிதழ் நேயர்களுக்கு வணக்கம். இன்றைய 'தாயக களம்' நிகழ்வில் மதிப்புக்குரிய ஆய்வாளர் காதர் மாஸ்டர் அவர்கள் கலந்துகொண்டு, தற்போதைய மத்திய கிழக்கு போர்ச் சூழல் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்திய மாற்றங்கள் இலங்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து விரிவாகப் பேசுகிறார்.**

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு காதர் மாஸ்டர் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**கேள்வி :**

**தற்போதைய மத்திய கிழக்கு போர்ச் சூழல் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நடைபெறும் மாற்றங்கள், நமது தாயகமான இலங்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? ஈரான் ஏவிய ஏவுகணைகள் அமெரிக்காவின் டீகோ கார்சியா தளம் வரை எட்டக்கூடும் என்ற நிலையில், இலங்கை உலக அரசியலின் மையப் புள்ளியாக மாறுமா?**

**பதில் :**

இலங்கை இன்று தனது விருப்பத்திற்கு அப்பாற்பட்டு ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையிலான மோதல் சூழலில் சிக்கியுள்ளது. இலங்கையின் பூகோள முக்கியத்துவத்தை விளக்க இரண்டாம் உலகப் போரை உதாரணமாகக் கொள்ளலாம். 1942 ஈஸ்டர் திருநாளின் போது ஜப்பானியர்கள் கொழும்பு மற்றும் திருகோணமலை மீது குண்டுவீசி பிரித்தானிய கடற்படையைத் தகர்த்தனர். அப்போது இலங்கை வீழ்ந்தால் முழு ஆசியாவையும் இழக்க நேரிடும் என்ற நிலை இருந்தது. அதனால் தான் பிரித்தானியா தனது தலைமையகத்தைக் கண்டிக்கு மாற்றி, மிக முக்கியமான தளபதியான மவுண்ட் பேட்டனை அனுப்பி இலங்கையைப் பாதுகாத்தது. இன்றும் உலகின் மிக முக்கியமான கடல் வழிகளான ஹார்முஸ் ஜலசந்தி மற்றும் மலாக்கா கால்வாய் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட ஒரு 'வாசல் படியாக' இலங்கை திகழ்கிறது. ஆப்பிரிக்கா அல்லது அமெரிக்காவிலிருந்து ஆசிய நாடுகளுக்குச் செல்லும் கப்பல்கள் இலங்கையைக் கடந்தே செல்ல வேண்டும். உலகக் கப்பல் போக்குவரத்தில் சுமார் 20 சதவீதத்திற்கும் அதிகமானவை இலங்கைக்கு மிக அருகாமையில் பயணிக்கின்றன. திருகோணமலை உலகின் மிகச்சிறந்த இயற்கை துறைமுகமாக இருப்பதால், போர்ச் சூழலில் எந்தவொரு பெரிய கப்பலும் அங்கு பாதுகாப்பாகத் தரிக்க முடியும். இத்தகைய கேந்திர முக்கியத்துவத்தால் இன்று இலங்கையின் 'முத்துவின் விலை' அதாவது அதன் மதிப்பு சர்வதேச அளவில் அதிகரித்துள்ளது.

**கேள்வி :**

**இலங்கையில் உள்ள துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் இன்று சர்வதேச சக்திகளால் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன? குறிப்பாக அமெரிக்காவுடனான ஒப்பந்தங்கள் இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்கின்றனவா?**

**பதில் :**

ஹம்பாந்தோட்டை, மத்தல மற்றும் கொழும்பு துறைமுக நகரம் என ஏற்கெனவே கட்டமைப்புகள் தயாராக இருப்பதால் இலங்கையின் மதிப்பு கூடியுள்ளது. அண்மையில் ஈரானிய கப்பல் ஒன்று காலியிலிருந்து 40 கடல் மைல் தொலைவில் அமெரிக்காவால் தாக்கப்பட்ட சம்பவத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இலங்கையின் கடல் எல்லைக்குள் இத்தாக்குதல் நடந்தும், அரசால் அதைக் கண்டிக்க முடியாமல் போனதற்குக் காரணம் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக் காலங்களில் அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட எக்சா (ACSA) போன்ற ஒப்பந்தங்களே ஆகும். இந்த ஒப்பந்தத்தின்படி அமெரிக்கா இலங்கையின் எந்தவொரு துறைமுகத்தையோ அல்லது விமான தளத்தையோ பயன்படுத்தலாம்; அவர்களின் தளவாடங்களைச் சோதனையிடக் கூட இலங்கைக்கு அதிகாரம் இல்லை. இதனால் இலங்கையின் இறையாண்மை மீறப்பட்டாலும் ஒப்பந்தம் இருப்பதாலேயே சர்வதேச அளவில் முறையிட முடியாத சூழல் உள்ளது. இருப்பினும், தற்போதைய அரசு இத்தகைய ஒப்பந்தங்களை ரத்து செய்யவோ அல்லது மாற்றியமைக்கவோ இந்தியா மற்றும் சீனாவின் அழுத்தங்களுக்கு மத்தியில் ஒரு மென்போக்கைக் கடைப்பிடித்து வருகிறது.

**கேள்வி :**

**இலங்கை ஒரு சர்வதேசப் பொருளாதார மையமாகவோ அல்லது 'ஹப்பாக' (Hub) மாறுவதற்குத் தற்போதைய சூழலில் வாய்ப்பு உள்ளதா?**

**பதில் :**

நிச்சயமாக. ஜிபூட்டி மற்றும் துபாய் போன்ற நாடுகள் தங்களின் புவியியல் அமைப்பை வைத்துச் சர்வதேச வருமானத்தை ஈட்டுவது போல இலங்கையாலும் முடியும். இலங்கையில் போர்ட் சிட்டி, மத்தல விமான நிலையம் மற்றும் திருகோணமலை எண்ணெய் குதங்கள் என அனைத்தும் தயாராக உள்ளன. சர்வதேச வங்கிகள் மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் ஒரு மையமாக (Hub) இலங்கையை மாற்ற முடியும். ஆனால், இலங்கையின் சாபக்கேடு என்னவென்றால், சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே நிலவி வரும் 'இனவாத அரசியல்' தான். சிங்கப்பூருக்கு இணையாக வளர வேண்டிய நாடு, அதிகாரத்தைத் தக்கவைக்க முன்னெடுக்கப்பட்ட இனவாதக் கொள்கைகளால் பின்னோக்கிச் சென்றது. ஈழத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்த்து, முறையான பொருளாதாரத் திட்டங்களை வகுத்தால் மட்டுமே இலங்கை ஆசியாவின் உயர்ந்த நாடாக மாற முடியும். தற்போதைய சர்வதேசச் சூழல் இலங்கைக்கு ஒரு பெரிய வாய்ப்பை வழங்கியுள்ளது; அதை இனவாதத்தைக் கடந்து சரியாகப் பயன்படுத்தினால் இலங்கை உலக அரசியலின் பொருளாதார மையமாக நிச்சயம் மாறும்.

**கேள்வி :**

**அரசியல் ரீதியாக இச்சட்டம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? குறிப்பாகத் தென்னிலங்கை மற்றும் வடகிழக்கு மக்களின் நிலைப்பாடு என்ன?**

**பதில் :**

இச்சட்டம் உண்மையில் ஜனநாயகம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் கருவியாகும். ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தவொரு அமைப்பையும் 'பயங்கரவாத அமைப்பு' என்று தடை செய்ய முடியும். அவ்வாறு தடை செய்யப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்லவும் இச்சட்டம் இடமளிக்கவில்லை.

தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் இதற்கு எதிராகக் குரல் எழுப்புகின்றன. ஆனால், அவர்கள் முன்பு ஆட்சியில் இருந்த போது PTA சட்டத்தை மிக மோசமாகப் பயன்படுத்தியவர்களே. தற்போதைய அரசியல் சூழலில் தமது பாதுகாப்பிற்காக அவர்கள் இச்சட்டத்தை எதிர்க்கக் கூடும். வடகிழக்கில் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் தலைமைகள் இதற்கு எதிராகப் பல விழிப்புணர்வுப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. சர்வதேச அளவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை (UNHRC) இச்சட்டம் குறித்து ஜனாதிபதிக்கு 20 பக்கங்கள் கொண்ட விரிவான கண்டனக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

• • •

## போரில் ஈரான் ... தொடர்ச்சி...

அலெக்ஸ் யங்கரின் கூற்றுப்படி, கடந்த ஆண்டு போரிலிருந்து முக்கிய பாடங்களைக் கற்றுக்கொண்டு, ஈரான் தனது இராணுவ பலத்தை மறுசீரமைத்துள்ளது. இதனால், இப்போது அதைத் தோற்கடிப்பது சாத்தியமற்றதாகிவிட்டது.

ஈரான் தனது அனைத்து முக்கிய ஆயுதங்களையும் நாடு முழுவதும் பரப்பியுள்ளது, இதனால் அமெரிக்கத் தாக்குதல்கள் முற்றிலும் பயனற்றதாகிவிட்டன.

ஈரானிய இராணுவத் தலைமை, கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பை கீழ்மட்டம் வரை பரவலாக்கியுள்ளது. இது, எந்தவொரு பெரிய தாக்குதலின் போதும் ஈரானிய இராணுவம் உடனடியாகவும், சுதந்திரமாகவும், முழுத் திறனுடனும் பதிலடி கொடுக்க உதவுகிறது.

ஆரம்பகட்டத் தாக்குதல்களில் டிரம்ப் பெற்றிருந்த சிறிய தொடக்க அனுகூலம் இப்போது முற்றிலுமாக இழக்கப்பட்டுவிட்டது.

இந்தப் போரில் இப்போது ஈரான் ஆதிக்கம் செலுத்துகிறது. ஈரான், அமெரிக்காவை இராணுவ ரீதியாக மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியாகவும் தற்காப்பு நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஹோர்முஸ் ஜலசந்தியின் பொருளாதார முக்கியத்துவத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி, ஈரான் உலகளாவிய எரிசக்தி விநியோகப் பாதையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது, இதனால் மேற்கத்திய சக்திகள் தத்தளிக்கின்றன என தெரிவித்துள்ளார்.

# சாபமா? சமூக சீர்கேடுகளின் தொடர்ச்சி

தமிழ்மொழி



இன்று இலங்கையில் நிகழும் சீர்கேடுகள் அச்சத்தையும், தலை குனிவையும் ஏற்படுத்தி உள்ளது. அத்தோடு அபாயத்தை நோக்கி மிக வேகமாக இளம் தலைமுறை செல்வது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி நிற்பதை சுட்டிக்காட்டி நிற்கிறது. அதுவும் ஈழத்தில் தமிழர் வாழும் பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட இந்த சீரழிவுகள் அதிகரிக்க யார் காரணம். ஒழுக்க விழுமியங்களை, கலாச்சார விதிகளை பின்பற்றி வாழ்ந்த ஒரு இனம் தடுமாறி திசை அறியாது ஓடுகிறது. அதற்கு உதாரணமே தமிழர் பகுதிகளில் இடம்பெற்ற இருவேறு நிகழ்வுகள் படம் பிடித்து காட்டுகின்றன.



யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தயாளினி அவர்களின் அவலமான சாவு மற்றொன்று மட்டக்களப்பு கிணற்றில் மீட்கப்பட்ட குற்றுயிரான பெண்ணும், வயலில் மீட்கப்பட்ட பெண்ணின் குழந்தையும், இறந்து அழுகிய பெண்ணின் உடலும். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியினையும், பீதியினையும் ஏற்படுத்தி உள்ளது. மனிதநேயமற்ற இந்த கொடூர செயலை குற்ற உணர்ச்சி இன்றி, பயமேதுமின்றி எப்படி இவர்களால் முடிந்தது. இதற்கு யார் காரணம். இதற்கு மூலகாரணம் என்ன. எவருமே அறியாத ஒன்று இல்லை.

இந்த சமூகத்தின் ஒரு பகுதியான இவர்கள் அகால மரணத்தின் மூலம் கிளறிவிட்டுச்சென்றிருக்கும் உண்மை என்ன. இன்னும் இங்கே துக்கத்துள் துவண்டுபோயும், அவற்றைப் புரிந்துகொள்ளவும் முடியாமல், வெளிப்படுத்த வும் முடியாமல், போலி கௌரவம், தன்மானம் என்ற பெயரில் தம்மையும், தம் பிள்ளைகளையும் அநியாயமாகப் பலியிட்டுக்கொண்டிருக்கும் பலருடைய மனச்சாட்சி தட்டி எழுப்பப்பட வேண்டும் இனியேனும்.

சித்தமருத்துவரின் மரணத்தின் சூத்திரதாரிகள் யாரென்றால் பெற்ற பிள்ளையும், மகளின் கணவனும் விலாவாரியாக சொல்லப்போனால் தூக்கத்தில் இருந்த தாயின் கால்களை மகள் பிடிக்க பிள்ளையின் காதலர் கழுத்தைப் நெரித்து கொன்றார் என்று வாக்குமூலங்களும், மருத்துவ அறிக்கையும் கூறுகின்றது. எமது ஊடகங்களும் விசாரணை முடிவதற்குள் வாய்ப்பாடு போலப் பாடமாக்கி சட்டப்படி நீதிமன்றம் விசாரித்துக் குற்றவாளி என்று யாரையும் தீர்ப்பளிக்க முன்னதாகவே தங்கள் வித்துவங்களைக் காட்ட கண்டபடி எழுதிவிடுகின்றது. பத்து மாதம் சுமந்து பெற்று பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிப்பித்து ஆளாக்கும் கனவுகளைச் சுமந்து தோற்றுப்போன அந்த தாயின் வலி, அந்த இறுதிக்கணம் எப்படி இருந்திருக்கும். போதைக்கு அடிமையான மருமகன், போதைக்கு அடிமையாக்கப்பட்ட மகள் என்று வீட்டுக்குள் அந்த தாய் குமுறிய நாட்கள், போராட்டங்கள் அவ்வாறான சூழ்நிலையை எதிர் கொண்டிருக் கக்கூடிய பெற்றோருக்கு மட்டும்தான் புரியும்.

தாயின்விருப்பமின்றிஅவள்ஏற்றுக்கொள்ளாமலே, தாயை எதிர்த்து மகள் தான் விரும்பிய நபரை பதிவுத் திருமணம் செய்துகொண்ட ஒருவரை, எமது பண்பாட்டுச் சொல்லான மருமகன் என்று எப்படி விழிக்க முடியும்? சரி, மகள் ஏன் அப்படிச் செய்தார்? அப்போ அவர் குற்றவாளியா? எது அவரை அவ்வாறு செய்யத் தூண்டியது? பிறக்கும்போதே இப்படித்தான் செய்வேன், என் அம்மாவைக் கொல்வேன் என்று தீர்மானித்துக்கொண்டு கருவாகி, உருவாகி வந்த பிள்ளையா என்ன? எங்கே தவறு நடந்தது? நல்லவரோ, கெட்டவரோ, நீங்கள் தெரிவுசெய்து, விரும்பித் திருமணம் செய்து, உடன்பட்டு இருந்து பெற்ற குழந்தைகளில் ஒன்றுதானே இப்படித் தவறியிருக்கிறது? அவ்வாறு பெற்றுக்கொண்ட இரண்டு பிள்ளைகளுக்கும் தாய், தந்தையராக ஒரு குடும்பச் சூழலை , அரவணைப்பை, பாதுகாப்பான வாழ்வைக் கொடுக்க முடியாமல்போனது கணவன் மனைவி இருவரினதும் தவறில்லையா?

பெற்றோரின் புரிதல் இல்லாத திருமண வாழ்க்கை, அதனால் ஏற்பட்ட பிரிவும் இதற்கு காரணமே.அந்த இடைவெளிக்குள் நடந்திருக்கக்கூடியவைதானே இப்படிப் பூதாகரமாகி உயிரையும் குடித்திருக்கிறது. தயாளினியும் சமூகத்தில் பதவியில் இருந்தாலும் அவரும் ஒரு தாய் தான்.



இவரைப் போன்ற பல அம்மாக்கள், அப்பாக்கள் இந்தச் சமூகத்தில் எங்கும் விரவிக்கிடக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் இப்படித்தான் அநாதரவாக, பிடிப்பதற்கு ஒரு கொடிமரம் இல்லாமல், சமூக வலைத்தளத்தைப் பற்றிப் பிடித்து அதற்குள் மூழ்கித் தொலைந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற இன்னுமொரு சம்பவமொன்றை உதாரணமாக காட்ட விரும்புகிறேன். மகனைக் காக்க மகளைப் பலிகொடுத்த தாய்

அவரும் ஒரு ஆசிரிய ஆலோசகர். அதுவும் சமய பாடம்.தான்பெற்ற மகனைப்போதைக்கு பறிகொடுத்துவிட்ட அவர், பாடுபட்டு அவனை மீட்டு, புனர்வாழ்வு அளிக்காமல் வீட்டுக்குள்வைத்திருக்க முயன்று,போதைக்கு அடிமையான கண்மண் தெரியாத அவனுக்கு தான் பெற்ற மகளையே பலியாய் கொடுத்த சம்பவமும் ஈழத்தில் அரங்கேறித்தான் இருக்கிறது.

சமூக கௌரவத்திற்காக தவறை மறைத்து ஆண் பிள்ளையைக் காக்கிறேன் பேர்வழி என்று கெட்டித்தனம் காட்டப்போய் பெண் பிள்ளையைத் தூக்குக்கு பலிகொடுத்தார். அதையறிந்த அந்தப் பெண் பிள்ளையின் நண்பியொருவர் தற்செயலாக இதனை உடற்கூறுப் பரிசோதனை செய்ய வந்த மருத்துவருக்கு கூறப்போய் உண்மை தெரிய வந்தும், தன் "கெட்டித்தனத்தால்" அதையும் ஒருவாறு மூடிமறைத்து வாழ்ந்து வருகிறார். இதுபோல் இன்னும் எத்தனையோ தாய்மார் நம் சூழலில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் காதலித்து, திருமணம் செய்து, பிள்ளை பெற்று கொள்ள தெரிந்த அளவுக்கு பல பெற்றோருக்கு பிள்ளை வளர்ப்புத் தெரிந்திருப்பதில்லை. இவை அரங்கேற சட்டச் சிக்கலும் ஒரு காரணமாக இன்று அமைந்தது எம் தலைமுறைக்கு பெரும் சாபக்கேடு.

18 வயதில் தான் சட்டப்படி ஒரு பெண் திருமணம் செய்ய முடியும் என்று சொல்லும் நம் இலங்கைச் சட்டம், அதே பெண்கள் 16 வயதிலேயே பாலியல் உறவு வைத்துக்கொள்ளும் உரித்துடையவர்கள் என்றும் சொல்லி யிருப்பதால், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் பல பெண் குழந்தைகளைத் தம்மால் காப்பாற்ற முடியாமல் இருக்கும் கையறு நிலையை அதிகமான பெற்றோர்கள், வைத்தியர்கள் பெரும் சவாலாக சந்தித்து வருகிறார்கள். இங்கே சட்ட சீர்திருத்தம் அவசியம்.

அது ஒருபுறம் இருக்க, பிள்ளை வளர்ப்பு தொடர்பான அறிவை - தெளிவை - பயிற்சியை பெற்றோருக்கு வழங்க வேண்டும். மற்றொன்று மட்டக்களப்பு கொள்ளை கொலை சம்பவம். எப்படி இவர்களால் இப்படி அச்சமின்றி செய்ய தோன்றுகிறது. பச்சை குழந்தையை தாயிடமிருந்து பறித்து வீசி எறிந்து விட்டு நகையை பறித்து தாயை கிணற்றில் வீசிவிட்டு போவதற்கு. அங்கே அழுகிய நிலையில் இன்னுமொரு பெண். அந்த துயரத்தின் நொடிகளை மனக்கண்கள் கூட எண்ணுவதற்கு அச்சப்படுகிறது. இந்த அதுவும் தமிழர் பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வது வேண்டும் என்றே கட்டவிழ்த்து விடப்பட்ட ஒன்றாகவே எண்ணத் தோன்றுகின்றது. ஆளாளுக்கு அமைச்சுக்களைச் சேர்ந்தவர்களும் பொறுப்புக்கழிப்புக்களையும், பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களைம் சுமத்தி காலம் கடத்தி ஒருவாறாக அந்தப் பாரிய "பொறுப்பில்" இருந்து தப்பித்துக்கொண்டு இருக்கிறார்கள்

ஆசிரிய ஆலோசகர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர், இன்னும் பல புத்திஜீவிகள் என்று சொல்லப்படுவோரின் குடும்பங்களுக்கே இந்தக் கதியென்றால்,அந்தளவு புத்தியில்லாத பெற்றோரின் குடும்பங்களின் நிலை? எமது பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்கள் என்று நெஞ்சை நிமிர்த்தி நாம் திமிராடிய நிலையெல்லாம் தவிடுபொடியாகி காலடியில் கிடக்கிறதே?

என்ன செய்யலாம்? சரியான முறையில், பொறுப்பானவர்களாக, பண்பாளர்களாக, சமூக உணர்வுள்ளவர்களாக, மூத்தோரை மதிப்போராக, பயபக்தி உள்ளவர்களாக, சமய நம்பிக்கை உடையவர்களாக, கிராமமாக கோவில் வழிபாடுகளில் ஈடுபடுபவர்களாக பிள்ளைகளை வளர்ப்பதைவிட, பரீட்சைகளில் பிள்ளைகள் உயர் பெறு பேறுகளை பெற வேண்டும். 9 ஏ எடுக்க வேண்டும். மருத்துவர்களாக , பொறியியலாளராக ஆக்கிவிடவேண்டும் என்று, கோவில், குளம், விளையாட்டு மைதானம், பொழுது போக்கு, வாசிப்பு, சமூக ஈடாட்டம், நட்பு, உறவு வட்டம்

தொடர்ச்சி: பக்கம் 17

# கிழக்கில் அதிகரித்து வரும் கொலைச் சம்பவங்கள்.....!

**மட்டுநகரான்**



வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதியானது சர்வதேசத்தினால் நோக்கப்பட்ட ஒரு பகுதி. உலகில் தமிழ் இனம் என்ற ஒன்று வாழ்கின்றது என்பதை எடுத்துக்காட்டிய பகுதியாகும்.தமிழர்கள் என்ற இனம் தனித்துவமான அடையாளத்துடனும் கலைகலாசாரங்களுடனும் வாழும் என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்திய ஒருதாயகமாக இருந்துவருகின்றது.

ஆனால் இன்று வடகிழக்கில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தமிழர்கள் மத்தியில் பல்வேறுபட்ட அச்ச நிலையினை ஏற்படுத்திவருவதுடன் எதிர்காலத்தில் தமிழர்களின் அடையாளங்கள் அழிந்து தமிழர்களின் தனித்துவம் இழந்துசெல்லும் நிலைமையினை காணமுடிகின்றது.

தமிழர் தாயகப்பகுதியில் இடம்பெற்ற ஆயுதம் தாங்கிய உரிமைப்போராட்டம் என்பது எமது நிலத்தினை மட்டும் பாதுகாக்கவில்லை எமது கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களையும் எமது தனித்துவத்தினையும் பாதுகாத்தது.அந்த ஆயுதம் தாங்கிய உரிமைப்போராட்டம் மௌனிக்கப்பட்டு 16 வருடங்களை கடந்துள்ள நிலையில் பல்வேறுபட்ட மாற்றங்களை வடகிழக்கில் தாயகத்தில் காணமுடிகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக நடைபெற்றுவரும் சம்பங்கள் என்பது கிழக்கில் தமிழ் மக்களை அச்சத்திற்குள்ளும் அதிர்ச்சிக்குள்ளும் மூழ்கவைத்துள்ளது. ஒரு சமூகம் கட்டமைக்கப்பட்ட சமூகமாக வாழும்போதே அந்த சமூகம் பலமிக்க சமூகமாக மாற்றமடையும்.ஒரு சமூகம் பலமடையவேண்டுமானால் அந்த சமூகத்திற்குள் ஒழுக்கம் கட்டுப்பாடுகள் மிக அவசியமானது.அதற்காக தண்டனைகள் கடுமையாக்கப்படும்போது குற்றங்கள் குறையும் என்பதனால்தான் தமிழீழ தேசிய தலைவரினால் தண்டனைகள் கடுமையாக்கப்பட்டன் காரணமாகவே குற்றங்கள் குறைந்து ஒரு ஒழுக்க சமூகம் உருவாக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் என்பது தமிழ் மக்கள் எதிர்காலத்தில் பொறுப்புடனும் விழிப்புடனும் செயற்படவேண்டும் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.வடபகுதியை ஆக்கிரமித்திருந்த பல்வேறு வேண்டத்தகாத செயற்பாடுகள் இன்று கிழக்கினை ஆக்கிரமிக்க ஆரம்பித்திருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனையானது பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்த நிலையில் உள்ளதாக சுகாதார துறையினரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

குறிப்பாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் ஐஸ் போதைப்பொருளின் பாவனை அதிகரித்துவரும் நிலையில் அதன் மூலம் சமூகத்திற்குள் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுவருவதை காணமுடிகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி பகுதியிலும் காத்தான்குடியின் சில பகுதிகளிலும் இந்த போதைப்பாவனை அதிகரித்து வருகின்றது.இந்த போதைப்பொருளுக்கு அதிகமான இளைஞர்களே அடிமையாகிவருகின்றனர்.குறிப்பாக கொழும்பு போன்ற பகுதிகளிலும் உள்ளவர்களினால் இப்பகுதிக்கு போதைப்பொருள் விநியோகம் செய்யப்படுவதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அருகில் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகவும் மாணவர்கள் மத்தியில் வெளியில் தெரியாத வகையிலான போதைப்பொருள் பாவனையானது அதிகரித்துவருவதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்கள வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரியளவிலான கொலை, கொள்ளை கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.தமிழர் பகுதியில் நினைத்துக்கூட பார்க்கமுடியாத வகையிலான சம்பவமாக மட்டக்களப்பில் நடைபெற்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.வடக்கில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றாலும் கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் இதுவரை காலமும் நடைபெறவில்லை.

அதுவும் கடந்த காலத்தில் ஆயுதப்போராட்டத்தின் வழித்தடத்தில் இருந்த பகுதியிலிருந்து இவ்வாறான சம்பவங்கள் பதிவுசெய்யப்படுவதானது மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கின்றது.தாங்கள் சுகபோகமாக வாழ் வதற்கும் ஆடம்பர வாழ்க்கைக்கும் மற்றவர்களின் உயிரைக்கூட எடுக்க துணிந்தவர்களாக சிலர் மாற்றம் பெற்றுவருவது ஒட்டுமொத்த சமூகத்திற்குமான ஆபத்தாகவே பார்க்கவேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா பகுதியை சேர்ந்த ஒரே குடும்பத்தினை சேர்ந்தவர்கள் திட்டமிட்டு



மேற்கொண்டுவந்த கொலைகளும் கொள்ளைகளும் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தினையே அச்சநிலைக்கு கொண்டுசென்றுள்ளது.

குறிப்பாக கணவன்,மனைவி,கணவனின் சகோதரன் ஆகியோர் இணைந்து திட்டமிட்ட வகையில் முன்னெடுத்துவந்த கொள்ளை,கொலை இன்று சமூகத்தினை விழிப்பு நிலைக்கு கொண்டுவந்திருக்கின்றது.

கணவனும் மனைவியும் தாங்கள் சொகுசாகவும் ஆடம்பரமாகவும் தினமும் வாழவேண்டும் என்பதற்காக தினமும் திட்டங்களை தீட்டி செயற்பட்டுவந்திருக்கின்றனர். பெப்ரவரி இரண்டாம் திகதி இந்த திட்டத்தினை செயற்படுத்துவதற்காக மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு வந்திருக்கின்றனர்.அங்கு நோட்டங்களை விட்டபோது பஸக்காக காத்திருந்த வயோதிப பெண் ஒருவர் சிக்கியிருக்கின்றார்.

அவருடன் மனைவியை உரையாட அனுப்பிவிட்டு மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தினை மனைவி மூலமாக குறித்த வயோதிப தாய்க்கு வழங்கிவிட்டு அவர் மயக்கமடைய அவரின் கழுத்திலிருந்த தங்க மாலை கைகளில் இருந்த காப்பு என்பன சுமார் 28இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொண்டுசென்றுள்ளனர். மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தே இந்த கொள்ளையினை முன்னெடுத்துள்ளனர்.சில தினங்களில் அதனை மட்டக்களப்பு திருமலை வீதியில் உள்ள நகைக் கடையொன்றில் விற்பனைசெய்து அவற்றில் மட்டக் களப்பு வந்தாறுமூலையில் உள்ள ஒருவரிடம் முச்சக்கர வண்டி ஒன்றினை கொள்வனவு செய்திருக்கின்றனர்.

கொள்ளையிட்ட நகையினை பணமாக மாற்றிய தன் பின்னர் ஆடம்பர செலவு செய்துள்ளனர். கைகளில் காசு இல்லாமல்போகவே மீண்டும் பயணத்தினை ஆரம்பித்திருக்கின்றனர்.இம்முறை நண்பர் ஒருவரின் முச்சக்கர வண்டியை களுவாஞ்சிகுடிக்கு செல்வதாக கூறி பெற்றுச்சென்றுள்ளார்.

களுவாஞ்சிகுடிக்கு வந்த பின்னர் வங்கியிலிருந்து சென்ற பெண்ணொருவரை பின்தொடர்ந்துவந்து களுவாஞ்சிகுடி பட்டிருப்பு பாலத்திற்கு அருகில் பஸ்ஸ_க்காக காத்திருந்தவரை தானும் தங்கள் ஊர்பகுதி ஊடாகவே செல்வதாகவும் இருக்கும் பணத்தினை தருமாறு ஏற்றிக்கொண்டுசெல்லும்போது இடையில் வைத்து மயக்கமருந்து கலந்த குளிர்பானம் குடிக்க வழங்கப்பட்டு குறித்த பெண் மயக்கம் அடைந்ததும் அவரிடமிருந்த பணம், நகைகள் எல்லாம் கொள்ளையிடப்பட்டதன் பின்னர் உயிருடன் கிணற்றில் வீசிவிட்டுச்சென்றுள்ளனர்.அவரிடம் இருந்து கொள்ளையிட்ட பணத்தினை மட்டக்களப்பு நகரில் உள்ள நகைக்கடையொன்றில் விற்பனை செய்த பின்னர் அதனைக்கொண்டு கார் ஒன்றினைக் கொள்வனவு செய்துள்ளனர்.

இது நடைபெற்று சுமார் 20 நாட்களுக்கு பின்னர் வவுணதீவிலிருந்து மட்டக்களப்பு நகருக்கு சென்ற பெண்ணை மேல்கூறிய நபருக்கு நடந்த அதேபாணியில் மட்டக்களப்பு நகருக்கு அழைத்துச்சென்று அவரை பின்தொடர்ந்து மீண்டும் வரும்போது அவருடனேயே பயணம் செய்து மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தினை வழங்கிய பின்னர் குறித்த பெண் மயங்கிய பின்னர் வீட்டுக்கு கொண்டுசென்று அவரது நகைகளை கழட்டிய பின்னர் வாங்கிய காரில் ஏற்றிச்சென்று நெல்லிக்காடு பகுதியில் முன்னர் பெண்ணை வீசிய அதே கிணற்றில் இந்த பெண்ணையும் வீசிச்சென்றுள்ளனர்.

கிணற்றிற்குள் பெண் வீசப்பட்டபோது அங்கிருந்த நீரில் உடல்பட்டதனால் மயக்க நிலை ஓரளவு தெளிந்த நிலையில் அங்கிருந்த உடலம் ஒன்றினை பற்றியவாறு இரவு முழுவதும் இருந்துள்ளதுடன் மறுநாள் காலை முழு பலத்தினையும் பயன்படுத்தி சத்தமிட்டுள்ள நிலையில் அப்பகுதியால் சென்ற இளைஞர்கள் கண்டு கொக்கட்டிச்சோலை பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் பொலிஸார் பொதுமக்கள் இணைந்து குறித்த பெண்ணை பாதுகாப்பாக மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அதனை தொடர்ந்து கிணற்றில் உள்ள பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் அவரது பாதணிகளை வைத்து உறவினர்களினால் குறித்த பெண் அடையாளம் காணப்பட்ட நிலையில் இது தொடர்பில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் எழுந்துவருகின்றது. இன்று இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மட்டுமல்ல முழு நாட்டிற்குமான விழிப்பு நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் மட்டக்களப்பில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் நமது பகுதிகளில் இவ்வாறான

தொடர்ச்சி: பக்கம் 09

# தமிழர் தேசத்திற்கென ஒரு தேசியத் தொலைக்காட்சி

தீபச்செல்வன்




போர் ஓய்ந்திருந்த காலம், கிளிநொச்சி நகரத்தின் தெருக்களில் கடைகளின் முன்பாக வைக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளில் கார்த்திகைப் பூ சின்னத்துடன் ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பாகியது. சனங்கள் எல்லாம் பெருமையோடும் வியப்போடும் பார்த்திருந்த அந்தக் காட்சி இன்னமும் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது. செய்தி தொடங்கும்போது பாயும் புலி தோன்றும் செய்திச் சமிக்கைக் காட்சியும் தனித்துவமாகப் புல் லரிக்கச் செய்தது. எங்கள் தேசிய தலைமையின் சிந்தனையில் 2005ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் நாளன்று, கிளிநொச்சியில் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி துவங்கப்பட்டது. தமிழர் தேசத்திற்கென ஒரு தேசியத் தொலைக்காட்சியாக அது அடையாளம் பெற்றதும் பெருமை.

### நிதர்சனப் பிரிவு

உலகில் காணொளி இதழ்கள் குறித்து ஒரு நாட்டின் அரசே சிந்திக்காத நிலையில், விடுதலைப் புலிகள் ஒளிவீச்சு என்ற கணொளி இதழைக் குறித்துச் சிந்தித்தமை எங்கள் விடுதலை இயக்கத்தின் மாறுபட்ட மற்றும் தனித்துவ சிந்தனை எனலாம். நிதர்சனம் வழியாக உருவாக்கப்பட்ட குறுந்திரைப்படங்கள், முழுநீளத் திரைப்படங்கள் மற்றும் காணொளிப் படைப்புக்கள் என்பன அன்று தமிழீழ தேசத்தின் நிலவரங்களைப் பல்வேறு படைப்புக்களாக உலகம் எங்கும் கொண்டு சேர்த்தன. இந்த நிலையில் நிதர்சனம் நிறுவனத்தின் மற்றொரு பரிணாமமாக தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் தோற்றம் அமைந்தது.

அந்த வகையில் மார்ச் 26 என்பது தமிழீழ ஊடக வரலாற்றில்ஒருமுக்கியநாளாகநினைவுகொள்ளப்படுகிறது. தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி என்பது இலங்கையில் இருந்து முதன் முதலில் ஒளிபரப்பான செய்மதித் தொலைக்காட்சியாகும். அந்த வகையிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு முன்னோடிகரமான செயற்பாட்டைச் செய்தது. கிளிநொச்சியில் இருந்து உலகப் பரப்பு எங்கும் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி என் பயணத்தைத் தொடங்கியது. ஒரு போராட்ட இயக்கம் தனது அரசியல் மற்றும் பண்பாட்டு அடையாளத்தை உலகிற்கு காட்சியாக எடுத்துச் செல்ல முயன்ற முக்கிய கட்டமாகும். ஆயுதப் போராட்டத்துடன் இணைந்து, தகவல் மற்றும் காட்சியின் சக்தியையும் உணர்ந்த விடுதலைப் புலிகள், ஊடகங்களை ஒரு அரசியல் ஆயுதமாவும், ஒரு தேசிய அடையாளமாகவும் பயன்படுத்தினார்கள்.

### புலிகளின் குரல்

ஒரு கெரில்லா இயக்கமாகத் தொடங்கிய விடுதலைப் புலிகள் ஆரம்ப காலங்களில், தகவல் பரிமாற்றம் மிகவும் குறுகிய வளங்களுடன் மேற்கொள்ளப்பட்டது. கையெழுத்துப் பிரசுரங்கள், சிற்றிதழ்கள், பின்னர் காசெட் பதிவு செய்யப்பட்ட உரைகள் போன்றவை மூலம் மக்கள் மத்தியில் தொடர்பாடலை மேற்கொண்டனர். முதலில் அச்சு ஊடங்களில் பெரும் பரிமாணத்தைக் காட்டிய புலிகளின் ஊடகத்துறை காலப்போக்கில், ஒழுங்கமைக் கப்பட்ட ஊடக அமைப்புகளாக வளர்ந்தன. அதில் முக்கியமானதாகத் திகழ்ந்தது வானொலி மற்றும் தொலைக்காட்சி. முதலில் வானொலித்துறை வாயிலாக விடுதலைப் புலிகளின் தொடர்பாடல் இயகத்தின் செயற்பாடுகளை வளர்க்க உதவியது.

'புலிகளின் குரல்' எனப் பரவலாக அறியப்பட்ட ஒலிபரப்பு சேவை, தமிழீழத்தின் உள்நாட்டிலும் வெளியுலகிலும் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கும் பணியை செய்தது. விடுதலைப் புலிகளுக்கும் போர்க்களத்திற்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பாடல் பாலமாகச் செயற்பட்டது. இந்த வானொலி சேவை வழியாக செய்தி, அரசியல் பகுப்பாய்வு, வீரச்சாவு அறிவிப்புகள், நினைவேந்தல்கள், பாடல்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பப்பட்டன.போரின் சூழ்நிலையிலும் தொடர்ந்து ஒலித்த இந்த வானொலி, ஒரு சாதாரண ஊடகமாக அல்லாமல், போராட்டத்தின் குரலாகவும் உணர்வுகளின் ஊற்றாகவும் விளங்கியது.



தமிழீழ தேசியத் தொலைக்காட்சி

அதே நேரத்தில், காட்சியின் தாக்கத்தை உணர்ந்த இயக்கம், தொலைக்காட்சி துறையிலும் தன்னிச்சையான முன்னேற்றத்தை அடைந்தது. மார்ச் 26 அன்று துவங்கப்பட்ட தமிழீழ தேசியத் தொலைக்காட்சி, ஒரு மாற்று காட்சி உலகத்தை உருவாக்க முயன்றது. செய்தி நிகழ்ச்சிகள், ஆவணப்படங்கள், போராளிகளின் வாழ்க்கை, மக்களின் துயரங்கள், அரசியல் கருத்துக்கள் ஆகியவை இதில் பிரதிபலித்தன. இத்தொலைக்காட்சி, தமிழீழம் எனும் அரசியல் கனவை காட்சியாக வடிவமைத்ததோடு, மிகவும் மக்கள் எழுச்சியும் வீரத்தின் கவர்ச்சியும் கொண்ட காட்சியூடகமாக உலக தமிழர்களிடையே உணர்வுப் பாலம் அமைத்தது.



இந்த ஊடகப் பயணம் வெறும் தகவல் பரிமாற்றமாக மட்டுமல்லாது, ஒரு அடையாள அரசியலின் வெளிப்பாடாகவும் இருந்தது. பொதுமக்களின் வாழ்வியல், துன்பங்கள், எதிர்ப்புகள் ஆகியவை காட்சியாகவும் குரலாகவும் பதிவு செய்யப்பட்டன. இதன் மூலம், உலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஊடகங்கள் வழியாக போராட்டத்தின் நியாயத்தை விளக்குவது, ஆதரவைப் பெறுவது, எதிர்ப்புகளை எதிர்கொள்வது ஆகியவை இந்த முயற்சியின் நோக்கங்களாக இருந்தன. சர்வதேச ஊடகங்கள் பலவும் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் காட்சிகளை தமது செய்திகள், நிகழ்வுகளில் மீள் ஒளிபரப்புச் செய்தன. விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ காட்சி ஊடகம் என்பதால் தமிழீழத்தின் காட்சிகள் நம்பகமாக அதில் வெளியானது.

### தமிழர் தேசத்தின் தேசிய ஊடகங்கள்

இன்னொரு முக்கிய அம்சம், இந்த ஊடகங்கள் தமிழ் இனத்தின் கலாச்சார மேடையாகவும் செயல்பட்டது. பாடல்கள், கவிதைகள், நாடகங்கள், நினைவேந்தல்கள் ஆகியவை ஊடகங்களில் இடம் பெற்றன. இதன் மூலம், போராட்டம் ஒரு ஆயுதப் போராட்டமாக மாத்திரமின்றி, ஒரு கலாச்சார இயக்கமாகவும் உருவெடுத்தது. இளம் தலைமுறையினருக்கு ஒரு தேசிய உணர்வை ஊட்டும் பணியையும் இந்த ஊடகங்கள் செய்தன. வாழ்வியல் கோலம் சார்ந்த நிகழ்வுகள், கல்வி சார்ந்த நிகழ்வுகள், தொன்மை சார்ந்த நிகழ்வுகள் போன்று பல புதிய புதிய நிகழ்ச்சிகள் வழியாக தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி தன்னை தேசிய காட்சி ஊடகமாக இன்னமும் பரிணாமிக்க வைத்தது.

ஊடகப் பயணம் சவால்களற்றதல்ல. அது சாதாரணப் பயணமும் இல்ல. தொழில்நுட்பக் குறைபாடுகள், வளங்களின் பற்றாக்குறை, இலங்கை அரசின் இடையூறுகள், தாக்குதல்கள் ஆகியவை தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன. இருந்தபோதிலும், குறைந்த வளங்களுடன் கூட ஒரு முழுமையான ஊடக அமைப்பை உருவாக்கிய முயற்சி, அதன் தனித்துவத்தைக் காட்டியது. இறுதிப்போரின் காலம் வரையில் இத் தொலைக்காட்சி தனது பயணத்தை கொண்டு சென்றது. இறுதிக்காலத்தில் இன்றைய ஊடக வடிவமான டிஜிட்டல் வடிவிலும் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி இணையங்களில் காணக் கிடைத்தது. அந்த வகையிலும் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி முன்னோடியானது.

இன்று, இந்த ஊடக அமைப்புகள் தாயகத்தில் செயலிழந்த நிலையில் இருந்தாலும், அவை விட்டுச் சென்ற தாக்கமும் வகிபாகமும் இன்னும் ஈழ மக்களின் நினைவுகளில் வாழ்கிறது. புலிகளின் குரல் வானொலியும் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியும் உருவாக்கிய குரலும் காட்சியும், ஒரு காலத்தின் சாட்சிகளாகவும், ஒரு மக்களின் அரசியல் மற்றும் பண்பாட்டு போராட்டத்தின் பதிவுகளாகவும் நிற்கின்றன. இன்றும் அவற்றின் பதிவுகள் டிஜிட்டல் ஊடகங்களில் வலம் வருகின்றன. உண்மையில் தமிழர் தேசத்தின் தேசிய ஊடகங்களுக்கு ஒருபோதும் அழிவில்லை. இன்றைய தலைமுறையும் இயக்கப் பாடல்களையும் காட்சிகளையும் உணர்வுடன் கேட்பதும் பார்ப்பதும் தொடர்கின்றது என்பதற்கு அன்று இந்த ஊடகங்கள் ஆற்றிய பணியே அடிப்படை. தமிழர்களின் தேசத்தின் தேசிய ஊடகங்களாக இவை என்றும் காலத்தை வழிப்படுத்தும்.

• • •

## கிழக்கில் அதிகரித்து ... தொடர்ச்சி...

சம்பவங்கள் நடைபெறக்கூடாது, இவ்வாறானவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.சட்டத்தரணிகள் இந்த குற்றவாளிகளுக்கு ஆதரவாக ஆஜராகக்கூடாது என தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

ஒரு உரிமைக்காக போராடிய இனம் இன்று தனது அடையாளத்தினை பாதுகாக்க போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.இவ்வாறான தொடர்ச்சியாக போராட்டங்கள் மூலம் எதிர்காலத்தில் எமது தமிழர்கள் மத்தியில் இவ்வாறான குற்றச்செயல்களை செய்ய நினைப்பவர்களுக்கு ஒரு பாடமாக அமையும்.அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் எதிர்கால சந்ததிக்கு ஒரு விழிப்புணர்வாகவும் அமையும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

எவ்வாறாயினும் வடகிழக்கு தமிழர் தாயகத்தில் இவ்வாறான துரதிர்ஸ்டமான சம்பங்கள் நடைபெறாத வகையில் முழுமையான விழிப்புணர்வுகளும் எமது போராட்டங்கள் தொடர்பான விடயங்களும் கொண்டு செல்லப்படவேண்டும்.

## இனிப்பு வகை உற்பத்திப் ... தொடர்ச்சி...

உலகளாவிய பாதிப்புகளுக்கு மத்தியிலும், உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் அதேவேளை நுகர்வோர் பாதிக்கப்படுவதை குறைக்கும் வகையில் செயற்படுவதே அரசாங் கத்தின் எதிர்பார்ப்பு என அவர் தெரிவித்தார்.

அங்கு கருத்து வெளியிட்ட சங்கத்தின் தலைவர் எஸ்.எம்.டி. சூரியப்பெரும, கடந்த காலங்களில் மூலப் பொருட்களின் விலை அதிகரித்த போதிலும், கொவிட் காலத்திற்குப் பின்னர் விலைகளை அதிகரிக்கவில்லை என சுட்டிக்காட்டினார்.

மார்ச், ஏப்ரல், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்கள் இத் துறைக்கு சிறந்த விற்பனை காலங்களாகும்.

தற்போது புத்தாண்டு காலத்திற்கான உற்பத்திகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, எத்தகைய நெருக்கடிகள் வந்தபோதிலும் புத்தாண்டு காலம் முடியும் வரை விலைகளை அதிகரிக்கப்போவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே மாதத்திற்குப் பின்னர் எரிவாயு, மின்சாரம் மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் மேலும் அதிகரித்தால் மட்டுமே விலை திருத்தம் குறித்து பரிசீலிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.



# சவால்களுக்கு மத்தியில் சர்வதேசச் சந்தையை ஆளும் ‘சிலோன் டீ’!

மருதன் ராம்

உலகளாவிய ரீதியில் “சிலோன் டீ” என்ற வர்த்தக நாமம் இலங்கைக்குப் பெரும் புகழையும் அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தரும் ஒரு முதுகெலும்பாகத் திகழ்கிறது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக உலக மக்களின் நாவிற்குப் புத்துணர்ச்சி அளிக்கும் இந்தத் தேயிலை, இன்று ஒரு இக்கட்டான காலப்பகுதியைக் கடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, இலங்கைத் தேயிலையின் பிரதான சந்தையாகக் கருதப்படும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இருப்பினும், இத்தகைய இக்கட்டான சூழலிலும் இலங்கைத் தேயிலைக்கான சர்வதேச மட்டத்திலான கேள்வி அதிகரித்துள்ளது என்பது வியக்கத்தக்க அதேவேளை மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் அமைதியற்ற சூழல் மற்றும் போர் அச்சுறுத்தல்கள் ஆரம்பத்தில் தேயிலை ஏற்றுமதியில் ஒருவித மந்தநிலையைத் தோற்றுவித்தன. குறிப்பாக, ஹார்முஸ் நீரிணைப்பு (Hormuz) மூடப்பட்டமை மற்றும் பிராந்திய மோதல்கள் காரணமாக குவைட், சவுதி அரேபியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளுக்கான நேரடி ஏற்றுமதிப் பாதைகள் முடங்கின.

இருப்பினும், இந்த நெருக்கடி ஒரு எதிர்பாராத சாதகமான நிலையையும் உருவாக்கியுள்ளது. யுத்த அச்சம் காரணமாக அங்கிருக்கும் மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைச் சேமிக்கத் தொடங்கியுள்ளனர். ஒரு கலாசார ரீதியான பானமாகவும், நீண்ட காலம் சேமித்து வைக்கக்கூடிய பொருளாகவும் தேயிலை இருப்பதால், அதற்கான கேள்வி சடுதியாக அதிகரித்துள்ளது.

இலங்கைத் தேயிலைச் சபையின் தரவுகளின்படி, கடந்த வார ஏலத்தில் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விற்பனை விலை 1,153 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. ஏலத்தில் விற்பனையாகாத தேயிலையின் அளவு 8% முதல் 10% வரை மாத்திரமே காணப்படுகிறது. இது சந்தையில் தேயிலைக்கான கேள்வியின் ஸ்திரத்தன்மையைக் காட்டுகிறது.

## சவால்களை முறியடிக்க எடுக்கப்பட்ட மூலோபாய நடவடிக்கைகள்

நெருக்கடியான நேரங்களில் எடுக்கப்படும் துரித தீர்மானங்களே ஒரு நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றன. இலங்கைத் தேயிலை சபை மற்றும் அரசாங்கம் இணைந்து முன்னெடுத்துள்ள சில முக்கிய நடவடிக்கைகளை இதன்போது சுட்டிக்காட்டலாம். வழமையான கடல் வழித்தடங்களில் பாதிப்பு ஏற்பட்டபோது, துருக்கி மற்றும் ஈராக் போன்ற நாடுகளுக்கு மாற்று கடல் வழித்தடங்கள் ஊடாக ஏற்றுமதிப் பணிகளைத் தேயிலை சபை வெற்றிகரமாக ஆரம்பித்துள்ளது.

இது உலகளாவிய விநியோகச் சங்கிலியில் இலங்கை கொண்டுள்ள நெகிழ்வுத்தன்மையைக் காட்டுகிறது. அதேநேரம், தேயிலை உற்பத்தித் தடையின்றி இருப்பதை உறுதி செய்ய, விவசாயிகளுக்குத் தேவையான மூன்று மாத காலத்திற்கான உரத்தை விநியோகிக்கும் விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மண்ணின் செழுமையைப் பேணி, தரமான தேயிலையைப் பெறுவதற்கு இது மிக அவசியமான ஒன்றாகும். மறுபுறம் தேயிலை தொழிற்சாலைகளின் இயந்திரங்களை இயக்கவும், போக்குவரத்துப் பணிகளுக்கும் எரிபொருள் இன்றியமையாதது.



தொழிற்சாலைகளுக்குத் தடையின்றி எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்ய விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. இதேவேளை, இலங்கையின் தேயிலைக்கு ரஷ்யாவில் தடை விதிக்கப்பட்டமை தொடர்பில் ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதற்காக இலங்கையின் தொழில்நுட்ப ஆய்வு குழு வொன்று ரஷ்யா சென்றுள்ளது.

ரஷ்யாவின் உயர்மட்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற இந்த சந்திப்பில், இலங் கையின் தேயிலைக்கு தடைவிதிக்கப்பட்டமை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், அது குறித்த விசேட தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கையின் தேயிலையை சீனாவில் சந்தைப்படுத்துவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. “சிலோன் டீ” என்ற பிரசித்திப்பெற்ற இலங்கைத் தேயிலையின் வர்த்தக நாமத்துடனேயே அதனைச் சந்தைப்படுத்த ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதுதொடர்பாக இலங்கை தேயிலை சபைக்கும் சீனாவின் தனியார் நிறுவனம் ஒன்றுக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பொருளாதாரத்தின் உண்மையான நாயகர்கள்

இலங்கைத் தேயிலையின் வெற்றியைக் குறித்துப் பேசும்போது, அதன் பின்னால் இருக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை மறந்துவிட முடியாது. அதிகாலைப் பனியில், கரடுமுரடான மலைச்சரிவுகளில் நின்று அவர்கள் பறிக்கும் “இரு இலைகளும் ஒரு மொட்டும்” தான் இன்று இலங்கையின் பொருளாதாரத்தைத் தாங்கிப் பிடித்துள்ளன. சந்தை வாய்ப்புகள் விரிவடையும் போது, அதன் நன்மைகள் அடிமட்டத் தொழிலாளர்களையும் சென்றடைய வேண்டும்.

தொழிலாளர்களின் சுகாதாரம், கல்வி மற்றும் வீட்டு வசதிகளை மேம்படுத்துவது அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும். தேயிலை விலை சர்வதேச சந்தையில் அதிகரிக்கும் போது, தொழிலாளர்களின் ஊதியத்திலும் நியாயமான மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பாரம்பரிய முறைகளுடன் நவீன தொழில்நுட்பங்களையும் புகுத்துவதன் மூலம் அவர்களின் வேலையை இலகுபடுத்த முடியும். இதேவேளை, இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் இருக்கும் தனித்துவமான சுவை மற்றும் நறுமணம் எதற்கும் ஈடாகாது.



எனினும், போட்டி மிகுந்த சர்வதேச சந்தையில் (கென்யா, வியட்நாம், இந்தியா போன்ற நாடுகள்) எமது இடத்தை தக்கவைக்க சில விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக அதிக கேள்வி நிலவும் போது தரத்தில் சமரசம் செய்து கொள்ளக்கூடாது. இலங்கையின் தரச் சான்றிதழை உலகத்தரம் வாய்ந்ததாகப் பேண வேண்டும். மத்திய கிழக்கு நெருக்கடி தற்காலிகமானது.

தொடர்ச்சி: பக்கம் 17

www.ilakku.org | info@ilakku. org | © 2026 இலக்கு இணையம்

# ஈழத்தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் சீமானின் 'நாம் தமிழர் ஆட்சிவரைவு' புதிய வழியைத் திறக்குமா?




திலீபன்

தமிழகத்தில் ஈழத்தமிழ் அகதிகளின் நிலை என்பது கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடரும் ஒருசிக்கலான மனிதாபிமான, சட்ட மற்றும் அரசியல் விவகாரமாகும். 1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட"கறுப்பு ஜூலை" இனக்கலவரத்தைத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிர் பிழைப்பதற்காகப் பாக்கு நீரிணையைக் கடந்து தமிழகத்திற்குத் தஞ்சம் புகுந்தனர். அன்றிலிருந்து இன்று வரை, அவர்களின் குடியுரிமை, வாழ்வாதாரம் மற்றும் எதிர்காலம் குறித்த விவாதங்கள் தமிழக அரசியலின் மையப்பொருளாகவே இருந்து வருகின்றன. 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழகச் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, அரசியல் கட்சிகள் தங்களது தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டு வரும் நிலையில், நாம் தமிழர் கட்சியின் 2026 தேர்தல் அறிக்கைவரைபு (மக்களரசு) இந்த விவகாரத்தில் ஒரு புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் 1983 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில்மட்டும் சுமார் 3,03,000 ஈழத்தமிழ் அகதிகள் இந்தியாவிற்குள் நுழைந்துள்ளனர். 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பெறப்பட்ட தரவுகளின்படி, தமிழகத்தில் தற்போது சுமார் 89,000 ஈழத்தமிழ் அகதிகள் வசித்து வருகின்றனர்.

**இவர்களின் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் வருமாறு:**

* முகாம்களில் வசிப்போர்: சுமார் 58,000 முதல் 60,000 பேர் தமிழகத்திலுள்ள 104 அரசு மறுவாழ்வு முகாம்களிலும், ஒடிசாவில் உள்ள சில முகாம்களிலும் வசித்து வருகின்றனர்.

* முகாமிற்கு வெளியே வசிப்போர்: சுமார் 30,000 முதல் 35,000 பேர் தமிழகத்தின் பல்வேறு நகர்ப்புற மற்றும் ஊரகக் குடியிருப்புகளில் சொந்தமாகத் தங்கி வசித்து வருகின்றனர்.

* இந்தியாவிலேயே பிறந்தவர்கள்: மொத்த எண்ணிக்கையில் சுமார் 40 விழுக்காட்டினர் (ஏறத்தாழ 35,600 பேர்) இந்திய மண்ணிலேயே பிறந்து வளர்ந்த இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினர் ஆவர். இவர்கள் இலங்கையை நேரில் பார்த்திராதவர்கள்.

* இந்திய வம்சாவளித் தமிழர்கள்: சுமார் 29,500 பேர் 1964 சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் குடியுரிமை சிக்கலில்உள்ளவர்கள்.

40 விழுக்காட்டிற்கும் அதிகமானவர்கள் இந்தியமண்ணிலேயே பிறந்து வளர்ந்த போதிலும், சட்டப்பூர்வமாக இன்னும் "வெளிநாட்டினராகவே" கருதப்படுவது அவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பெரும் முட்டுக்கட்டையாகஉள்ளது.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட "குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர்(விலக்கு) ஆணை 2025" (Immigration & Foreigners (Exemption) Order 2025) ஒரு குறிப்பிடத்தக்க நிர்வாக மாற்றத்தைக் கொண்டுவந்தது. இந்த ஆணையின்படி, ஜனவரி9, 2015-க்கு முன்னதாக இந்தியாவிற்குள் முறையான ஆவணங்களின்றி நுழைந்த பதிவு செய்யப்பட்ட ஈழத்தமிழர்கள்மீது வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் குற்றவியல் நடவடிக்கைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அவர்கள் கைது செய்யப்படுவதோ அல்லது நாடு கடத்தப்படுவதோ தவிர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதுஅவர்களுக்கு நிரந்தரக் குடியுரிமையையோ அல்லதுவாக்குரிமையையோ வழங்கவில்லை.



**நாம் தமிழர் கட்சியின் 2026 தேர்தல் அறிக்கை வரைபு:**

சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி (NTK), 2026 தேர்தலை முன்னிட்டு "மக்களரசு" (Makkalarasu) என்றபெயரில் தனது செயற்பாட்டு வரைவை வெளியிட்டுள்ளது.இதில் ஈழத்தமிழர் பிரச்சனை என்பது ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமை மற்றும் இறையாண்மை சார்ந்த விவகாரமாக அணுகப்பட்டுள்ளது.

**1. சர்வதேச நீதி மற்றும் அரசியல் இறையாண்மை:**

ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேச அளவிலான அழுத்தத்தைக் கொடுப்பதையே நாம் தமிழர் கட்சி தனது முதன்மைக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

* இனப்படுகொலை அங்கீகாரம்: 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்றது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை என்பதை அங்கீகரித்து, இதற்காகச்சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) மூலம் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என NTK வலியுறுத்துகிறது.
* பொது வாக்கெடுப்பு: ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்மானிக்க ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில் ஒரு சுதந்திரமான பொது வாக்கெடுப்பு (Referendum) நடத்தப்பட வேண்டும் என்பதைத் தனது வரைபில் முன்வைத்துள்ளது.

* விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம்: தமிழீழ விடுதலைப்புலிகள் (LTTE) அமைப்பு மீதான தடையை இந்திய அரசு நீக்கவேண்டும் என்பது கட்சியின் முக்கியக் கோரிக்கையாகஉள்ளது. இலங்கையிலேயே போர் முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில், இந்தியாவில் இத்தடை நீடிக்கப்படுவது தேவையற்றது என்பது இக்கட்சியின் வாதம்.

**2. மூலோபாயக் கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத் திட்டங்கள் ஈழத்துடனான தொடர்பை வெறும் மனிதாபிமான அடிப்படையில் மட்டுமல்லாது, பொருளாதார ரீதியாகவும் வலுப்படுத்த NTK திட்டமிடுகிறது:**

* ராமநாதபுரம் துறைமுகத் திட்டம்: ஈழத்தமிழர் பிரச்சியின் உச்சகட்டத்தின் போது முன்மொழியப்பட்ட இத்துறைமுகத்திட்டத்தை, 2026 அறிக்கையில் NTK மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இது ஈழத்துடனான கடல்சார் தொடர்பை வலுப்படுத்தவும், அப்பகுதியில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கும் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் திட்டமிடப்பட்டுள்ளது.

* கச்சத்தீவு மீட்பு: தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிஉரிமைகளை மீட்கவும், ஈழத்துடனான வரலாற்றுத் தொடர்பைப் பாதுகாக்கவும் கச்சத்தீவை முழுமையாக மீட்கவேண்டும் என்பதை NTK ஒரு தீர்மானமாக முன்வைக்கிறது.

* தமிழ்த் தேசிய வைப்பகம் (Tamil National Bank): உலகளாவிய தமிழர்களுக்கான நிதி கட்டமைப்பை உருவாக்கவும், ஈழத்தமிழர் உள்ளிட்ட புலம்பெயர்ந்த தமிழர்களின்பொருளாதார மேம்பாட்டிற்கும் ஒரு தனி வங்கி (Tamil National Bank) உருவாக்கப்படும் என NTK வரைபு கூறுகிறது.

**3. அகதிகள் உரிமை மற்றும் குடியுரிமைப் போராட்டம்:**

தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர்களை "அகதிகள்" என்ற

தொடர்ச்சி: பக்கம் 13

# மாமனிதர் ஜெயக்குமார் மாமாவின் நினைவு

## (29/04/2007) – 29/04/2026)

மேதகுவேலுப்பிள்ளைபிரபாகரன்ஒருமுறைஅவரைப் பற்றி இவ்வாறு கூறினார்: "ஜெயக்குமார் ஒரு கொள்கைப்பிடிப்புள்ள மனிதர்; நமது சுதந்திர இயக்கத்தின் இலட்சியங்களை அசைக்க முடியாத விசுவாசத்துடனும் அர்ப்பணிப்புடனும் நிலைநிறுத்தியவர்." இன்று மாமனிதர் ஜெயக்குமார் மறைந்து 19 ஆண்டுகள் ஆகின்றன. அவரது வாழ்க்கையை வெறும் நினைவுகளுக்குள் சுருக்கிவிட முடியாது; மாறாக, அது இன்னும் முடிவடையாத, தொடரும் ஒரு அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இது ஒரு செயலற்ற நினைவு நாள் அல்ல. இது அரசியல் தெளிவு, வரலாற்று உண்மை மற்றும் கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றைக் கோரும் ஒரு நாள். நான் மீண்டும் ஒருமுறை ரூக்வுட் மயானத்தில் நின்று, அவருக்காக மட்டுமல்ல, நாம் தொடர்ந்து பேசவும், அணிதிரட்டவும், போராடவும் தங்கள் உயிரை ஈந்த நமது அனைத்து மார்வீரர்களுக்காகவும் மலர் அஞ்சலி செலுத்தினேன்.

அவர் அன்றாடம் எதிர்கொண்ட யதார்த்தங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு, அவரது கைகளில் ஒரு குழந்தையாக நான் இருந்ததை நினைவுகூர்கிறேன். இன்று, அந்த இடைவெளி என்னிடம் இல்லை. அந்தத் தலைமுறையினர் செய்த ஒவ்வொரு தியாகமும் அடையாளப்பூர்வமானது அல்ல, அது ஒரு வியூகப்பூர்வமானது, அது அவசியமானது, மேலும் அது இப்போது நம் மீது ஒரு நேரடிக் கடமையைச் சுமத்துகிறது என்பதை இன்று நான் புரிந்துகொள்கிறேன்.

மாமனிதர் ஜெயக்குமார் வெறுமனே அந்த இயக்கத்திற்குள் இருந்த ஒரு நபர் மட்டுமல்ல. அவர் அதன் அரசியல் முதுகெலும்பின் ஒரு பகுதியாக இருந்தார். தமிழ் ஒருங்கிணைப்புக் குழுவில் ஆசிய பசிபிக், தென்னாப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கான ஒருங்கிணைப்பாளராக, தமிழீழப் போராட்டத்தின் உலகளாவிய பரிமாணத்தை வடிவமைப்பதில் அவர் ஒரு மையப் பாத்திரத்தை வகித்தார். புலம்பெயர்ந்தோர் தாய்நாட்டிலிருந்து துண்டிக்கப்படாமல் இருப்பதையும், வாதங்கள் வெறும் உணர்ச்சிவசமாகச் சுருக்கப்படாமல் இருப்பதையும், அரசியல் ஈடுபாடு சுயநிர்ணயத்தின் அடிப்படைக் கொள்கையில் வேரூன்றியிருப்பதையும் அவர் உறுதி செய்தார்.

தமிழ்ப் போராட்டம் ஒரு மனிதாபிமானப் பிரச்சினை அல்ல, அது தேசியம், இறையாண்மை மற்றும் சர்வதேசச் சட்டம் தொடர்பான ஒரு அரசியல் பிரச்சினை என்பதைப் பலர் தொடர்ந்து புறக்கணித்து அல்லது வேண்டுமென்றே மறைத்துவிடும் ஒரு விஷயத்தை அவர் புரிந்துகொண்டார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஜனாதிபதி பதவிக்காலம் உட்பட, உலகளாவிய சக்திகளுடனான தனது ஈடுபாடுகளில், அவர் நீர்த்துப்போகாத ஒரு நிலைப்பாட்டைப் பேணி வந்தார். அவரைப் பொறுத்தவரை, உரையாடல் என்பது ஒருபோதும் அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுப்பதாக இருந்ததில்லை. அவற்றைத் தெளிவுடனும் வலிமையுடனும் வலியுறுத்துவதே அதன் நோக்கமாக இருந்தது. கான்பெராவில் நடைபெற்ற அமைதி மற்றும் நீதி மாநாடு வெறும் ஒரு நிகழ்வாக மட்டும் இருக்கவில்லை; அது ஒரு தலையீடாகும். அது தமிழ் ஈழத்தை ஒரு விளிம்புநிலைக் கோரிக்கையாக அல்லாமல், சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு மக்களின் சுயநிர்ணய உரிமையின் சட்டபூர்வமான வெளிப்பாடாக நிலைநிறுத்தியது.

சர்வதேச அமைப்புகள் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அறநெறிகளின் மூலமே செயல்படுகின்றன என்பதை அவர் உணர்ந்திருந்தார். மனித உரிமைகளைப் பேணுவதாகக் கூறும் நாடுகள், தங்களின் புவிசார் அரசியல் நலன்களுடன் ஒத்துப்போகும்போது, அரச வன்முறையை ஒரே நேரத்தில் செயல்படுத்தி, அதற்குச் சட்டபூர்வ அங்கீகாரத்தையும் அளிக்கின்றன.

இதை அவர் ஊடுருவிப் பார்த்தார். இலங்கை அரசு தமிழ் தேசத்தின் அரசியல் இருப்பைத் தொடர்ந்து மறுத்து வருகிறது என்ற மையப் பிரச்சினையை அழிக்கும் வகையில், தமிழ் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய, பலவீனமான கதைகளாக மாற்றியமைக்கப்படுவதை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

தன் மக்களைப் பாதுகாத்ததற்காக ஆஸ்திரேலியாவில் அவர் கைது செய்யப்பட்டபோதும், அவர் பின்வாங்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பரிந்து பேசுவது குற்றமாக்கப்படும் அதே வேளையில், பெரும் அட்டூழியங்களுக்குப் பொறுப்பான அரசுத் தரப்பினர் வரவேற்கப்பட்டுச் சட்டபூர்வமாக்கப்படும், ஜனநாயக நாடுகள் என்று அழைக்கப்படுபவற்றின் முரண்பாடுகளை அந்தத் தருணம் வெளிப்படுத்தியது. அவரது பதில் மௌனம் அல்ல, எதிர்ப்பு. அவரது கைது இயக்கத்தைப் பலவீனப்படுத்தவில்லை; மாறாக, உண்மையை அடக்குவதற்கு அரசுகள் எந்த எல்லைக்கும் செல்லும் என்பதை அது அம்பலப்படுத்தியது.



**ரேணுகா இன்பகுமார்**
சட்டம்/கலை இளங்கலைப் பட்டம், WSU பட்டதாரி
சட்ட முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் தற்போதைய மாணவர்
பட்டதாரி வழக்கறிஞர்

இருப்பினும், அவர் கொள்கைப்பிடிப்புடன் இருந்தார். அவர் பிற்போக்கு அரசியலுக்குள் இறங்கவில்லை. வெளிப்படைத்தன்மைக்காகவோ அல்லது அங்கீகாரத்திற்காகவோ அவர் சமரசம் செய்துகொள்ளவில்லை. அவர் ஒழுக்கம், தெளிவு மற்றும் நோக்கத்தைக் கடைப்பிடித்தார்.

இன்று தமிழீழப் போராட்டம்தொடர்ந்து சவாலுக்குட்படுத்தப்படும் ஒரு களத்தில் நிற்கின்றது. நமது வரலாற்றை அரசியல்மயமற்றதாக்கவும், இனப்படுகொலையை ஒரு மோதலாகச் சுருக்கவும், கட்டமைப்பு ரீதியான ஒடுக்குமுறையைப் போருக்குப் பிந்தைய மீட்சி எனச் சித்தரிக்கவும், இறையாண்மைக்கான கோரிக்கைகளை நல்லிணக்கத்திற்கான வெற்று அழைப்புகளால் மாற்றவும் திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதை நாம் முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும். எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கை அரசு தமிழ் தேசத்திற்கு எதிராக ஒரு திட்டமிட்ட அழிப்புச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது. இதில் வாக்குரிமைப் பறிப்பு, படுகொலைகள், கட்டாயக் காணாமலாக்கப்படுதல், இராணுவமயமாக்கல், நில அபகரிப்பு மற்றும் பண்பாட்டு அழிப்பு ஆகியவை அடங்கும். 2009-ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்வுகள் ஒரு தனிப்பட்ட துயரம் அல்ல; அவை இந்தச் செயல்பாட்டின் உச்சக்கட்டமாகும். இனப்படுகொலைக்கான சட்ட வரம்பை எட்டும் சூழ்நிலைகளில், சில மாதங்களுக்குள் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அதன் நோக்கம், அளவு, மற்றும் ஒரு குறிப்பிட்ட தேசிய இனக்குழுவைக்குறிவைத்தது ஆகியவைவிவாதத்திற்குரிய விடயங்கள் அல்ல; அவை பதிவுசெய்யப்பட்ட விடயங்கள். அதன்பின் நிகழ்ந்தது நீதியல்ல, மாறாக ஒருங்கிணைப்பு.

இலங்கை அரசு தமிழ் தாயகத்தை இராணுவமயமாக்குவதையும், பொதுமக்கள் மீது கண்காணிப்பை மேற்கொள்வதையும், மக்கள்தொகை அமைப்பை மாற்றுவதற்காக அரசால் ஆதரிக்கப்படும் குடியேற்றங்களைக் நிறுவுவதையும், நினைவுச் சின்னங்களை அழிப்பதையும் தொடர்கிறது. தாய்மார்கள் காணாமல் போன தங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து தேடுகின்றனர். அரசியல் கைதிகள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நிலம் தொடர்ந்து அபகரிக்கப்படுகிறது. இது மோதலுக்குப் பிந்தைய மீட்சி அல்ல. இது கட்டமைப்பு வழிமுறைகள் மூலம் தொடரும் இனப்படுகொலையாகும்.

இந்தச் சூழலில், நல்லிணக்கத்தின் மொழி நடுநிலையானது அல்ல; அது பொறுப்புக்கூறலை மறைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு அரசியல் கருவியாகும்.

சர்வதேசச் சட்டம் தெளிவாக உள்ளது. சுயநிர்ணய உரிமை என்பது நிபந்தனைக்குட்பட்டதல்ல. ஒரு அரசு, ஒரு மக்களின் அரசியல் நிலையைத் தாங்களாகவே தீர்மானிக்கும் திறனை மறுக்கும்போதும், அந்த மறுப்பு திட்டமிட்ட வன்முறையுடன் சேர்ந்து நிகழும்போதும், இறையாண்மையைப் கோருவது சட்டபூர்வமானது மட்டுமல்ல, அவசியமானதாகவும் ஆகிறது. இந்த உரிமையைச் செயல்படுத்துவதில் சர்வதேச அமைப்புகள் தோல்வியடைவது, அந்த உரிமையைச் செல்லாததாக்கிவிடாது; அது அந்த அமைப்பின் வரம்புகளையும் அரசியல் சார்புகளையும் அம்பலப்படுத்துகிறது.

எந்தவொரு வெளி சக்தியும் எங்களுக்கு நீதியை வழங்காது என்பதை ஜெயக்குமார் மாமா புரிந்துகொண்டார். சர்வதேச ஈடுபாடு என்பது உத்திசார்ந்ததாக இருக்க வேண்டுமே தவிர, ஒருபோதும் சார்புடையதாக இருக்கக் கூடாது என்பதை அவர் புரிந்துகொண்டார். நமது கூட்டு அரசியல் உணர்விலும், நமது ஒற்றுமையிலும், திணிக்கப்பட்ட கதைகளை ஏற்க மறுப்பதிலுமே நமது பலம் அடங்கியுள்ளது என்பதை அவர் புரிந்துகொண்டார்.

போராட்டம் தனிநபர்களைக் கடந்து நிலைத்திருக்கும் என்பதை அவர் அறிந்திருந்ததால், இளைஞர்கள் மீது கவனம் செலுத்தினார். அவர் சார்புநிலையை உருவாக்கவில்லை, திறனை வளர்த்தார். அடுத்த தலைமுறை குழப்பத்தை அல்ல, தெளிவையே மரபுரிமையாகப் பெறும் என்பதை அவர் உறுதி செய்தார்.

இன்று நாம் அந்த நிலையில்தான் நிற்கிறோம். நாம் அரசியலற்றவர்களாக இருக்க முடியாது. நமது துன்பங்களை வரலாற்று ரீதியாகப் புறக்கணித்தவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையில் நமது கோரிக்கைகளை நீர்த்துப்போகச் செய்ய முடியாது. நமது போராட்டத்தின் சட்ட மற்றும் அரசியல் அடித்தளத்தை பலவீனப்படுத்தும் விதங்களில் அதைத் தவறாகச் சித்தரிக்க முடியாது.

மாமனிதர் ஜெயக்குமாரைக் கௌரவிப்பது என்பது, அதே அளவிலான ஒழுக்கம், நேர்மை மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் போராட்டத்தைத் தொடர்வதாகும். துல்லியமாகப் பேசுவதாகும். நோக்கத்துடன் அணிதிரள்வதாகும். பிளவுபடுதலை நிராகரித்து, கூட்டு அரசியல் பலத்தை நிலைநிறுத்துவதாகும்.

தமிழீழம் ஒரு கோஷமல்ல. அது, ஒரு மக்கள் கண்ணியம், பாதுகாப்பு மற்றும் தன்னாட்சியுடன் வாழ்வதற்கான உரிமையில் வேரூன்றிய ஒரு அரசியல் தீர்வு. அது, பல பத்தாண்டுகால அரச வன்முறைக்கும் சர்வதேசத் தோல்விக்கும் எதிரான ஒரு எதிர்வினை. அது, அன்று இருந்தது போலவே இன்றும் அவசரமான ஒரு கோரிக்கையாகும்.

அவரது வாழ்க்கை வீணாகவில்லை. அவரது பணி இன்னும் முடிவடையவில்லை. அது நமக்குள்ளே, நாம் பேசுவதிலும், நாம் அணிதிரளுவதிலும், நாம் மறக்க மறுப்பதிலும், நீதிக்குக் குறைவான எதையும் ஏற்க மறுப்பதிலும்வாழ்கிறது.

இன்று, நாம் அவரை வெறுமனே நினைவுகூரவில்லை. நாம் மீண்டும் உறுதிபூணுகிறோம். நாம் உண்மைக்கு மீண்டும் உறுதிபூணுகிறோம். நாம் நீதிக்கு மீண்டும் உறுதிபூணுகிறோம். நாம் சுயநிர்ணயத்திற்கு மீண்டும் உறுதிபூணுகிறோம்.

நாம் மௌனமாக மாட்டோம். நாம் அழிக்கப்பட மாட்டோம். நமது எதிர்காலத்தை நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம். அவரது மரபு நமக்குப் பின்னால் இல்லை. அது நமக்கு முன்னால் இருக்கிறது.

**தமிழீழம் வாழ்க.**



# ஹோர்முஸ் நீரிணை: உலக எரிசக்தி இயக்கத்தின் கட்டுப்பாட்டு மையம்

தீபன்

உலக எரிசக்தி விநியோக அமைப்பு வெளிப்படையாக பெரியதும் பல்வகை கொண்டதும் போல் தோன்றுகிறது. பல நாடுகள், பல்வேறு வழங்குநர்கள், மற்றும் பல கடல் மற்றும் நிலப் பாதைகள் இணைந்து இயங்கும் ஒரு விரிவான அமைப்பாக இது பொதுவாக விவரிக்கப்படுகிறது. ஆனால் நடைமுறையில், இந்த அமைப்பின் முக்கிய எரிசக்தி பரிமாற்றம் மிகவும் குறுகிய ஒரு கடல் பாதையில் சுருங்கியுள்ளது: ஹோர்முஸ் நீரிணை (Strait of Hormuz). இது ஒரு சாதாரண கடல் வழி அல்ல; இது உலக எரிசக்தி இயக்கத்தின் கட்டுப்பாட்டு மையமாக செயற்படுகிறது.



இந்த நீரிணை சுமார் 33 கிலோமீட்டர் அகலமுள்ளதாயினும், கப்பல்கள் செல்லும் பயன்பாட்டு பாதை (effective corridor) சுமார் 6 கிலோமீட்டர் மட்டுமே. இந்த குறுகிய பாதையின் வழியாக சாதாரண சூழலில் தினமும் சுமார் 19–21 மில்லியன் பீப்பாய்/நாள் (bpd) அளவிலான எண்ணெய் மற்றும் அடர்த்தி திரவம் (condensate) போன்ற திரவ எரிபொருட்கள் பரிமாறப்படுகின்றன. இதன் பொருள், உலக எண்ணெய் வழங்கலின் சுமார் 20% இந்த ஒரு பாதையின் மீது சார்ந்துள்ளது. இதற்கு கூடுதலாக, உலகளாவிய எல்.என்.ஜி (LNG) போன்ற வாயு எரிசக்தி வர்த்தகத்தின் சுமார் 20–25% இதே பாதையை கடக்கிறது. உலகளாவிய மொத்த எண்ணெய் தேவை சுமார் 100 மில்லியன் பீப்பாய்/நாள் என்ற நிலையில், இந்த அளவு ஒரு பாதையில் சுருங்கியிருப்பது அதன் அமைப்பு அபாயத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த எரிசக்தி பரிமாற்றத்தை சவுதி அரேபியா,ஈராக், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் மற்றும் ஈரான் போன்ற சில நாடுகள் வழங்குகின்றன. வாயு பக்கத்தில், கட்டார் உலகளாவிய LNG வழங்கலில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த எரிசக்தி பெரும்பாலும் சீனா மற்றும் இந்தியா போன்ற இறக்குமதி சார்ந்த பொருளாதாரங்களுக்கு செல்கிறது. இதனால், ஒரு குறுகிய கடல் பாதை, உலகின் மிகப்பெரிய நுகர்வு மையங்களுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது.

முன்பு, இந்த அமைப்பு தொடர்ச்சியான பரிமாற்றத்துடன் இயங்கியது. தினமும் சுமார் 20–25 எண்ணெய் கப்பல்கள் இந்த நீரிணையை கடந்து சென்றன. உலக விலை அமைப்பு முழுமையான வழங்கலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் தற்போதைய நிலையில், இந்த எண்ணிக்கை சுமார் 2–5 கப்பல்கள்/நாள் மட்டுமே உள்ளது. மொத்த எரிசக்தி பரிமாற்றம் சுமார் 1.5–2 மில்லியன் பீப்பாய்/நாள் அளவிற்கு குறைந்துள்ளது. இதன் பொருள், மொத்த திறனின் 80–90% செயலிழந்துள்ளது. இது ஒரு சாதாரண சந்தை மாற்றம் அல்ல; இது ஒரு நேரடி பரிமாற்ற முறிவு.

இந்த மாற்றம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்கள் மற்றும் அதற்கு ஈரான் அளித்த பதிலால் உருவானது. ஈரானின் அணுகுமுறை முழுமையான மூடல் அல்ல; ஆனால் அது நடைமுறையில் “தேர்வு செய்யப்பட்ட நகர்வு” (selective transit) நிலையை உருவாக்கியுள்ளது. கப்பல்கள் சுதந்திரமாக செல்ல முடியாத சூழலில், காப்பீட்டு நிறுவனங்கள் ஆபத்து மதிப்பீட்டை உயர்த்துகின்றன. இதனால், காப்பீட்டு கட்டணங்கள் அதிகரிக்கின்றன, சில கப்பல்கள் காப்பீடு பெற முடியாமல் போகின்றன, மற்றும் பல பயணங்கள் ரத்து செய்யப்படுகின்றன.

இந்த மறைமுக கட்டுப்பாடுகள், நேரடி தடை இல்லாமல் இருந்தாலும், பரிமாற்றத்தை கடுமையாகக் குறைக்கின்றன. சில மாற்று வழிகள் இருப்பது உண்மை. சவுதி மற்றும் UAE போன்ற நாடுகள் நிலப்பாதை குழாய்கள் (pipelines) மூலம் ஒரு பகுதியை மாற்ற முயற்சிக்கின்றன. ஆனால் இந்த குழாய்களின் மொத்த திறன், ஹோர்முஸ் வழியாக செல்லும் 20 மில்லியன் பீப்பாய்/நாள் அளவுக்கு அருகிலும் செல்லாது. அதேபோல், கப்பல்கள் ஆபிரிக்கா வழியாக அல்லது நீண்ட கடல் பாதைகள் வழியாக மாற்றப்படலாம், ஆனால் இது அதிக நேரம், அதிக செலவு, மற்றும் குறைந்த செயல்திறனை உருவாக்கும். இதனால், “பரிமாற்றம் குறைந்தது” என்பது “பரிமாற்றம் வேறு பாதையில் தொடர்கிறது” என்று அர்த்தமல்ல; மொத்த அளவு உண்மையாகவே குறைகிறது.



உலக எண்ணெய் அமைப்பு மிகக் குறைந்த மீதித் திறனுடன் (spare capacity) இயங்குகிறது, பொதுவாக 2–4 மில்லியன் பீப்பாய்/நாள் மட்டுமே. இதனால், சுமார் 20 மில்லியன் பீப்பாய்/நாள் அளவிலான பரிமாற்றத்தை இழந்தால், அதை வேறு இடங்களில் இருந்து நிரப்ப முடியாது. இது அரசியல் விவாதம் அல்ல; இது கணக்கியல் கட்டுப்பாடு. வழங்கல் குறைந்தால், விலை உயர்வது மட்டுமல்ல, பொருளாதார செயல்பாடுகளும் கட்டாயமாக சுருங்கும். இந்த மாற்றம் நிதி அமைப்பிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எண்ணெய் வர்த்தகம் பெரும்பாலும் டொலரில் (USD) நடைபெறுகிறது. இதனால், ஏற்றுமதி நாடுகள் டொலர் வருவாயைப் பெற்று, அதை அமெரிக்க அரசுத் திரட்டுகள் மற்றும் நிதி முதலீடுகளில் செலுத்துகின்றன. இந்த சுழற்சி தொடர்ச்சியான எரிசக்தி பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. பரிமாற்றம் குறைந்தால், டொலர் ஓட்டமும் குறையும். . அதே நேரத்தில், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் ரஷ்யா மற்றும் பிற வழங்குநர்களுடன் மாற்று ஒப்பந்தங்களை உருவாக்குகின்றன. சில பரிவர்த்தனைகள் டொலர் அல்லாத நாணயங்களில் நடைபெறுகின்றன. இதனால் டொலர் அமைப்பு உடனடியாக சிதைவதில்லை, ஆனால் அதன் உலகளாவிய ஆதிக்கம் மெதுவாக தளரும்.

இந்த சூழ்நிலையில், பல நிலைமைகள் உருவாகலாம். தற்போதைய குறைந்த பரிமாற்ற நிலை நீடிக்கலாம். அல்லது கட்டுப்படுத்தப்பட்ட, பகுதியளவு செயற்படும் அமைப்பு உருவாகலாம். கடுமையான நிலையில், உற்பத்தி மற்றும் நகர்வு இரண்டும் பாதிக்கப்பட்டால், உலகளாவிய வழங்கல் கடுமையாக குறையும். இன்னொரு சாத்தியம், உலக எண்ணெய் சந்தை பிராந்திய அடிப்படையில் பிரிந்து, பல்வேறு விலை மற்றும் வர்த்தக அமைப்புகளாக மாறுவது. வேகமான மீட்பு சாத்தியமானாலும், நம்பிக்கை மற்றும் செயற்பாட்டு அமைப்பு உடனடியாக பழைய நிலைக்கு திரும்பாது.

இந்த அனைத்து நிலைகளிலும் முக்கியமானது எரிசக்தி பரிமாற்றம் தான். யார் உற்பத்தி செய்கிறார்கள் என்பதல்ல, எவ்வளவு எரிசக்தி நகர்கிறது என்பதே அமைப்பின் உண்மையான அளவுகோல். ஹோர்முஸ் நீரிணை இந்த பரிமாற்றத்தின் கட்டுப்பாட்டு மையமாக உள்ளது.

இந்த நீரிணை வழியாக பரிமாற்றம் கட்டுப்படுத்தப்படுமானால், உலக விலை அமைப்பு, வர்த்தக அமைப்பு, மற்றும் நிதி அமைப்பு அனைத்தும் மாற்றம் அடையும்.

இறுதியாக, உலக அமைப்பின் உண்மை மிகவும் எளியது. எண்ணெய் உலகில் உள்ளது என்பதல்ல முக்கியம். அது எவ்வளவு பரிமாறப்படுகிறது, எந்த பாதையில் பரிமாறப்படுகிறது, யார் அதை கட்டுப்படுத்துகிறார்கள் என்பதே முக்கியம். அந்த கேள்விகளின் மையத்தில் ஹோர்முஸ் நீரிணை உள்ளது.

• • •

## சவால்களுக்கு மத்தியில் ... தொடர்ச்சி...

ஆனால், தேயிலைத் துறையின் நிலையான வளர்ச்சிக்கு நீண்டகாலத் திட்டமிடல் அவசியம்.

மத்திய கிழக்கைத் தாண்டி ஜப்பான், ரஷ்யா மற்றும் அமெரிக்க சந்தைகளை ஆழமாக அணுகுதலும் முக்கியமானதாகும். பெருந்தோட்டப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் வேண்டும். இலங்கைத் தேயிலைத் துறை இன்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்புமுனையில் உள்ளது. சர்வதேச நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தேயிலை சபை எடுத்துள்ள துரித நடவடிக்கைகள் மற்றும் விவசாயிகளின் கடும் உழைப்பு என்பன இலங்கையின் பொருளாதார மீட்புக்குப் பெரும் பலமாக அமைந்துள்ளன.

எமது நாட்டின் “கருப்புத் தங்கம்” எனப்படும் தேயிலை, வெறும் ஒரு வர்த்தகப் பொருள் மட்டுமல்ல. அது பல இலட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் இலங்கையின் அடையாளமாகும். தேயிலை தொழிலாளர்களை பாதுகாத்து, தொழிலாளர்களைக் கௌரவித்து, நவீன சந்தைப்படுத்தல் யுக்திகளைக் கையாண்டால், சர்வதேச சந்தையில் “சிலோன் டீ” என்றென்றும் முதலிடத்திலிருக்கும் என்பதில் ஐயமில்லை.



# பாலஸ்தீனியர் சித்திரவதை: இஸ்ரேலுக்கு உலகம் அனுமதி – ஐ.நா நிபுணர்

மொழிபெயர்ப்பு
**ஸ்ரீவன் புஸ்பராஜா.க**

பாலஸ்தீனியர்களைச் சித்திரவதை செய்ய இஸ்ரேலுக்கு உலகம் அனுமதி அளித்துள்ளது என்கிறார் ஐ.நா நிபுணர் பிரான்செஸ்கா அல்பானீஸ்.

இஸ்ரேலில் சித்திரவதை என்பது ‘செயல்முறையில் அரசின் கொள்கையாகிவிட்டது’ என்று ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பானீஸ் கூறுகிறார்.

பாலஸ்தீனியர்களை சித்திரவதை செய்ய இஸ்ரேலுக்கு உலகம் அனுமதி அளித்துள்ளது என்றும், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனியப் பகுதியில் வாழ்க்கை என்பது “உடல் மற்றும் மன ரீதியான துன்பங்களின் தொடர்ச்சியாக” உள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் கூறுகிறார்.

1967 முதல் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனியப் பகுதியின் உரிமைகள் நிலைமை குறித்த ஐ.நா-வின் சிறப்பு அறிக்கையாளரான பிரான்செஸ்கா அல்பானீஸ், இஸ்ரேலில் “சித்திரவதை என்பது செயல்முறையில் அரசின் கொள்கையாகிவிட்டது” என்று கடந்த திங்கட்கிழமை கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் தனது சமீபத்திய அறிக்கையை சமர்ப்பித்தபோது, “பாலஸ்தீனியர்களை சித்திரவதை செய்ய இஸ்ரேலுக்கு செயல்முறையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது, ஏனெனில் ஐநா அங்கத்துவ நாடுகளின் அரசுகளில் பெரும்பாலானவையும், அவர்களின் அமைச்சர்களும் அதை அனுமதித்துள்ளனர்,” என்று அவர் மிகவும் கவலையுடன் கூறினார்.

“ஒரு காலத்தில் மறைமுகமாகச் செயல்பட்ட சித்திரவதைகள் இப்போது வெளிப்படையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது மிக மேல்மட்ட அரசியல் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட அவமானம், வலி மற்றும் இழிவுபடுத்தும் ஒரு ஆட்சிமுறை,” என்று “சித்திரவதை மற்றும் இனப்படுகொலை” என்ற தலைப்பிலான அந்த அறிக்கையில் அல்பானீஸ் கூறியுள்ளார்.

“சித்திரவதை என்பது சிறை அறைகள் மற்றும் விசாரணை அறைகளுக்குள் மட்டும் அடங்கியதல்ல,” என்று அந்த அறிக்கை கோடிட்டுக் காட்டியது.

“பெரும் இடப்பெயர்வு, முற்றுகை, உதவி மற்றும் உணவு மறுப்பு, கட்டுப்பாடற்ற இராணுவ மற்றும் குடியேற்ற வாசிகளின் வன்முறை, பரவலான கண்காணிப்பு மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த தாக்கத்தின் மூலம், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனியப் பிரதேசம் ஒரு கூட்டுத் தண்டனைக் களமாக மாறியுள்ளது. அங்கு வாழ்க்கைச் சூழல்களின் அழிவு, இனப்படுகொலை மற்றும் வன்முறையை ஒரு கூட்டுச் சித்திரவதைக் கருவியாக மாற்றி, ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுக்கு நீண்டகால மன மற்றும் உடல்ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றனர்,” என்றும் அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் மற்றும் காசா மீதான அதன் இனப்படுகொலைப் போரின் வெளிப்படையான விமர்சகரான அல்பானீஸ், சிறப்பு அறிக்கையாளர் பதவியிலிருந்து அவரை நீக்க வேண்டும் என்ற பலத்த கோரிக்கைகள் வலுத்து வரும் நிலையில், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிடமிருந்து கடும் எதிர்ப்பைச் சந்தித்துள்ளார்.

காசாவின் சுகாதார அமைச்சகத்தின்படி, அக்டோபர் 7, 2023ம் திகதியில் இருந்து இன்றுவரை , காசா மீதான இஸ்ரேலியத் தாக்குதல்களில் குறைந்தது 72,263 பேர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 171,944 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில், அக்டோபர் 2023 முதல், இஸ்ரேலிய அதிகாரிகள் 18,500-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களைக் கைது செய்துள்ளனர்; பிப்ரவரி மாத நிலவரப்படி, அவர்களில் குறைந்தது 1,500 சிறார்களும் அடங்குவர் என்று அந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.

ஐ.நா-மனித உரிமை ஆணையகத்தில் உள்ள இஸ்ரேலின் தூதரகம், அல்பானீஸின் அறிக்கையைக் கடுமையாகச் சாடியதுடன், அவரை “குழப்பத்தின் முகவர்” என்றும் அழைத்தது.

“அல்பனீஸ், தனது ஐ.நா. மனித உரிமைத் தளத்தைத் தவறாக பயன்படுத்தி தீவிர யூத விரோத கருத்துகளை வெளிப்படுத்துகிறார். இதில் ஹோலோகாஸ்ட் சம்பவத்தை தவறாக விளக்கும் மற்றும் அதன் முக்கியத்துவத்தை குறைத்து காட்டும் கதைகளையும் பரப்புகிறார். மேலும், அவர் அடிக்கடி பயங்கரவாத அமைப்புகளை ஆதரிக்கும் வகையில் கருத்துகளை வெளியிடுவதோடு, இஸ்ரேல் அரசின் இருப்பையே பாதிக்கக்கூடிய ஆபத்தான தீவிரவாதக் கருத்துக்களையும் முன்வைக்கிறார்,” என்று இஸ்ரேலின் பிரதிநிதிக்குழு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“அல்பனீஸ் அவர்கள் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் உறுப்பு நாடுகளை ‘வேதனை அளிக்கும் செயல்கள் மற்றும் இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தடுக்கவும், தண்டிக்கவும் வேண்டும் என’ அழைப்பு விடுத்தார்;. மேலும் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

“ஏற்கனவே இனப்படுகொலைக்கு உள்ளான யூத மக்களைப் பயன்படுத்தி பாலஸ்தீனிய மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் இனப்படுகொலையை நியாயபடுத்து முடியாது” என்று அவர் கூறியதாக ஐ.நா செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

‘இத்தகைய செயல்கள் பாலஸ்தீனர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போது சர்வதேச சமூகம் தொடர்ந்து அதை சகித்துக் கொண்டே இருந்தால், சட்டம் என்பதற்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்’ என்று கோடிட்டுக் கூறினார்.

**நன்றி அல் ஜஸீரா**

## இலங்கையின் அழியா ... தொடர்ச்சி...

ஈரானியக் கப்பலான ‘ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா’ காலிக் கடற்பரப்பிற்கு அப்பால் 44 கடல் மைல் தொலைவில் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், இது இலங்கையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் நிகழ்ந்த ஒரு அத்துமீறலாகும்.

அதுமாத்திரமின்றி எதிர்காலத்தில் இலங்கை கடற்படை தளபதி(யாராக இருந்தாலும்) சர்வதேச தளங்களில் விடுக்கும் அழைப்புக்களை ஏற்று கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமா என்பதிலும் ஐயப்பாடுகள் எழுந்துள்ளதோடு கடற்படைத் தளபதிகளின் அழைப்புக்கள் சர்வதேச மட்டத்தில் கேலிக்குள்ளாகும் நிலைமையே உருவாகியுள்ளது.

இதேவேளை, மார்ச் 4ஆம் திகதிக்கும் 8 ஆம் திகதிக்கும் இடையில் அமெரிக்கா தனது இரு போர் விமானங்களை மத்தளவில் இறக்க முயன்றுள்ளது. அதே மார்ச் 4ஆம் திகதியன்று தான் ஈரானியக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இதுவொரு தற்செயலான நிகழ்வு அல்ல

ஜிபுட்டியில் இருந்து இயங்கும் அமெரிக்கப் போர் விமானங்கள், வழக்கமாகப் பயன்படுத்தும் இந்தியத் தளங்களைத் தவிர்த்து மத்தள விமான நிலையத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன் என்ற கேள்வி இங்கு மிக முக்கியமானது அல்ல.

ஈரானியக் கப்பல்கள் இலங்கைக்கு அருகே நிலை கொண்டிருப்பதை அறிந்தே, அவற்றை தாக்குவதை மையமாகக் கொண்டதொரு தந்திரோபாயத் திட்டத்துக்காகவே மத்தளவைப் பயன்படுத்த அமெரிக்கா திட்டமிட்டதா என்ற சந்தேகம் வலுவாக எழுகிறது.

இலங்கையுடன் போர் விமானங்கள் தரையிறங்குவதற்கான எந்தவொரு முறையான பாதுகாப்பு உடன்பாடும் இல்லாத நிலையில், அமெரிக்காவுக்கு தலா எட்டு ஏவுகணைகளுடன் போர் விமானங்களை மத்தளவில் தரையிறக்குவதற்கான தேவை எதற்காக எழுந்தது?

இலங்கை அரசாங்கம் இந்த உண்மைகளைத் தனது மக்களுக்குத் தெளிவாக விளக்கத் தவறிவிட்டது. இதனால் அமெரிக்காவைத் திருப்திப்படுத்த ஈரானியக் கப்பலை இலங்கை காவுகொடுத்ததா என்ற கேள்வியே தற்போது எங்கும் ஒலிக்கிறது.

அதேநேரம், ஈரானின் பிறிதொரு கப்பலான ஐ.ஆர்.ஐ.எஸ் புஷெருக்கு இலங்கை புகலிடம் கொடுத்திருக்கின்றது. அதற்கான தீர்மானம் எவ்வாறு எடுக்கப்பட்டது என்று ஆராய்ந்து பார்த்தால் அதற்கு இந்தியாவின் வழிகாட்டலே காரணமாகியுள்ளது.

ஈரானின் மூன்றாவது கப்பலான ஐ.ஆர்.ஐ.எஸ் லவன் நெருக்கடியான சூழலில் கொச்சி துறைமுகத்தினை நோக்கிச் சென்றிருந்த நிலையில் அதற்கு புகலிடம் அளிப்பதற்கு இந்தியா தீர்மானித்திருந்தது. அந்த தீர்மானத்தின் முன்மாதிரியும், இந்தியாவின் உறுதுணையும் தான் இலங்கை ஐ.ஆர்.ஐ.எஸ் புஷெர் விடயத்தில் சாதக தீர்மானத்துக்கு வித்திட்டது.

மூன்று கப்பல்கள் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய விமர்சனங்கள் பல காணப்பட்டாலும் தார்மீக அடிப்படையில் ஐ.ஆர்.ஐ.எஸ் லவனை பாதுகாத்திருந்த இந்தியா அதிலிருந்த 133 மாலுமிகளையும் பத்திரமாக ஈரானுக்கு திருப்பி அனுப்பி விட்டது.

ஆனால் ஐ.ஆர்.ஐ.எஸ் புஷெரில் மீட்டுள்ள 208பேர், ஐ.ஆர்.ஐ.எஸ் டெனாவில் மீட்கப்பட்ட 32பேர் உள்ளடங்கலாக 240பேரையும் பாதுகாப்பாகத் தாய்நாட்டிற்கு அனுப்பி வைப்பதும் மனிதாபிமானச் சட்டங்களின் கீழ் இலங்கையின் கடமையாகும்.

ஆனால் அந்தச் செயற்பாட்டை இலங்கையால் முன்னெடுக்க முடியாத திராணியற்ற நிலையில் தான் உள்ளது. இது இலங்கை அரசு சர்வதேச அழுத்தங்களுக்கு எவ்வாறு அடிபணிகிறது என்பதை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியவாறுள்ளது.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் தன்னை ‘நடுநிலை நாடு’ என்று பிரசாரம் செய்வதில் காட்டும் ஆர்வத்தைச் செயற்பாடுகளில் காட்டத் தவறிவிட்டது, தவறிக்கொண்டிருக்கிறது. ஒருபுறம் அமெரிக்காவின் பாதுகாப்பு அழுத்தங்கள், மறுபுறம் ஈரானின் நீண்டகால பொருளாதார மற்றும் அரசியல் நட்புறவு - இரண்டையும் சமநிலைப்படுத்தத் தெரியாத முதிர்ச்சியற்ற போக்கையே அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

மேலும் வல்லரசு நாடுகளின் மோதல் களமாக இலங்கைத் தீவு மாறி வருவதையும், அதனைத் தடுக்கும் வலிமை தற்போதைய அரசியல் தலைமைக்கு இல்லை என்பதையும் ‘ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா’ கப்பல் விவகாரம் பட்டவர்த்தனமாக நிரூபித்துள்ளது.

‘ஐ.ஆர்.ஐ.எஸ். டெனா’ மூழ்கடிக்கப்பட்டாலும் இப்போதைக்குஇந்தவிவகாரம்முடிவுக்குவரப்போவதில்லை. ஏனென்றால் ஈரானின் கடற்படை அங்கத்தவர்கள் இலங்கையில் தான் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் ஈரானிய கப்பல் மூழ்கடிப்பு இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் அழியாதவொரு கறையாகவே நிலைத்திருக்கும்.

• • •

 © 2026 இலக்கு இணையம்

# ஈரானில் ஒரு நீர்நிலத் தரையிறக்கம் மற்றும்
# கலிப்பொலிப் போர்



படைத்துறை ஆய்வாளர்
**ரியோ டி ஜெனிரேர்**
பிரேசில்

தமிழில்: **ஆர்தீகன்**

ஈரானுக்கு எதிரான எந்தவொரு போரும், காலிபோலியின் உன்னதமான தவறை மீண்டும் செய்யும் அபாயத்தைக் கொண்டுள்ளது: அதாவது, புவியியல் ரீதியாக வலுவாகச் சாதகமாக இருக்கும் ஒரு உறுதியான தற்காப்பை ஒரு வல்லரசு குறைத்து மதிப்பிடுவது. 1915-ல், பிரிட்டிஷ் பேரரசு தனது மேலான கடற்படையே டார்டனெல்லஸைக் கடந்து, ஒட்டோமான் பேரரசை ஒப்பீட்டளவில் எளிதாக வீழ்த்து வதற்குப் போதுமானது என்று நம்பியது.

தாக்குபவர்களுக்கான தாக்குதல் மற்றும் தற்காப்பு ஆயுதங்களின் கையிருப்பு குறைந்து வரும் வேளையில், ஈரான் ஒரு முழுமையான போருக்குத் தயாராகி வருகிறது. பல்வேறு வகையான ஆயிரக்கணக்கான ட்ரோன்கள், ஏவுகணைகள் மற்றும் கூட்டமாக ஏவப்படும் அதிவேகத் தாக்குதல் படகுகள், ஈரானில் தரையிறங்குவதற்கு பாது காப்பு வழங்கும் கூட்டணியின் திறனை விரைவாக முறிய டித்து, செயலிழக்கச் செய்துவிடும்.



வின்ஸ்டன் சர்ச்சில், இயன் ஹாமில்டன் மற்றும் லார்ட் கிச்சனர் உள்ளிட்ட தளபதிகளும் அரசியல்வாதிகளும், துருக்கியர்களை ஒரு பின்தங்கிய இராணுவமாகவும், பிரிட் டிஷ் போர்க்கப்பல்களின் முதல் தாக்குதலிலேயே தப்பி ஓடிவிடும் என்றும் கருதினர். ஆனால் யதார்த்தம் முற்றிலும் வேறுபட்டதாக அமைந்தது. காலிபோலியின் புவியியல் அந்தத் தாக்குதலை ஒரு பயங்கரக் கனவாக மாற்றியது. கடற்கரைகளுக்கு மேலுள்ள செங்குத்தான உயரங்களை ஒட்டோமான்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். நேச நாடுகள் தரையிறங்கியதும், அவர்கள் குறுகிய மணல் திட்டுகளில் சிக்கிக்கொண்டனர்; மேலிருந்து வரும் இயந்திரத் துப்பாக்கி மற்றும் பீரங்கித் தாக்குதல்களுக்கு முழுமையாக ஆளாக நேரிட்டது. பாதுகாப்பாக முன்னேறுவதோ அல்லது பின்வாங்குவதோ கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக இருந்தது. இதுவே, ஈரான் இன்று தனது முழு கடற்கரையையும் சூழ்ந்துள்ள மலைகளில் கொண்டிருக்கும் அதே இயற்கைச் சுவராகும்.

பாரசீக வளைகுடாவில் தரையிறங்க முயற்சிக்கும் எந்தவொரு படையும், கடற்கரைகளுக்குப் பின்னால் உள்ள செங்குத்தான மேடுகளை உடனடியாக எதிர்கொள்ளும். இது தற்காப்பவருக்கு முழுமையான பார்வைத்திறனையும், தாக்குதல் மேலாதிக்கத்தையும் வழங்கும். புவியியலுக்கு அப்பாற்பட்டு, துருக்கியர்களிடம் பிரிட்டிஷார் குறைத்து மதிப்பிட்ட ஒரு விஷயம் ஈரானிடம் உள்ளது: அது ஒரு முழுமையான தற்காப்பு அரணை உருவாக்கும் திறன்.



தளவாடங்கள் மற்றொரு பெரும் தடையாக உள்ளன. காலிபோலியில், தொடர்ச்சியான தாக்குதலுக்கு மத்தியில் நேச நாடுகளால் விநியோகப் பொருட்களின் ஓட்டத்தைத் தக்கவைக்க முடியவில்லை. ஈரானில், சவால் இன்னும் பெரிதாக இருக்கும்: அப்பகுதியில் உள்ள அமெரிக்கத் தளங்களை விநியோக வழிகள் நம்பியிருக்க முடியாது,



ஏனெனில் அவை ஏற்கனவே 26 நாட்களாக கடுமையாக சேதமடைந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன. அதற்கு பதிலாக, அவை ஏற்கனவே பலவீனமடைந்த அமெரிக்கத் தொழில்துறை தளத்தின் ஆதரவுடன், மிகவும் தொலைவில் உள்ள தளவாடங்களைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும்.



இதற்கிடையில், ஈரான் தனது நிலத்தடி தொழிற் சாலைகள், குறுகிய விநியோக வழிகள், மற்றும் ஈராக்கிய போராளிகள் மற்றும் ஹூதிகள் மூலம் பல முனைகளைத் திறக்கும் திறன் ஆகியவற்றைக் கொண்டு உள்நாட்டிலேயே போரிட்டுக் கொண்டிருக்கும். இதற்கு இணையாக, ஹோர்முஸ் நீரிணை டார்டனெல்லஸின் நவீன வடிவமாகச் செயல்படுகிறது. ஈரான், அதிநவீனமானதும் ஒப்பீட்டளவில் மலிவானதுமான கடற்படைக் கண்ணிவெடிகள், கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் தனது சொந்தக் கடற்படை ஆகியவற்றைக் கொண்டு அப்பகுதியில் ஆதிக்கம் செலுத்துகிறது.

1915-ல் சாதாரண கண்ணிவெடிகள் ஒரே நாளில் மூன்று பிரிட்டிஷ் போர்க்கப்பல்களை மூழ்கடித்ததைப் போலவே, ஒன்று அல்லது இரண்டு பெரிய கப்பல்கள் அல்லது தரையிறங்கும் படகுகளின் இழப்பு கூட முழு நடவடிக்கையையும் சீர்குலைக்கப் போதுமானதாக இருக்கும். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்ததைப் போலவே, இந்த மதிப்பீட்டுப் பிழை இன்றும் தொடர்கிறது. துருக்கியர்களுக்கு “நவீனப் போரை எதிர்கொள்ளும் மன உறுதி இல்லை” என்று பிரிட்டிஷார் நம்பியதைப் போலவே, இன்று ஒரு தீவிரமான தொழில்நுட்பக் குண்டுவீச்சு ஈரானிய ஆட்சியை விரைவாக வீழ்த்திவிடும் என்று சிலர் கருதுகின்றனர்.

“ஈரான் ஒரு காகிதப் புலி… ஒரு பலமான அடி,

**தொடர்ச்சி: பக்கம் 17**



# அமெரிக்காவின் இறுதிப் போராகுமா தரையிறக்கம்?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்க ஈரான் போர் ஒரு மாதத்தை அண்மிக்கின்றது. ஆனால் இந்த போரை அமெரிக்கா ஆரம்பித்த சில நாட்களுக்குள் இழந்துவிட்டது. ஒரு நாட்டின் படைக் கட்டமைப்புக்களை மட்டும் தாக்காது அந்த நாட்டின் உட்கட்டுமானங்களை தாக்குவதன் மூலம் ஆட்சியாளர்களையும் மக்களையும் பீதியடையச் செய்து போரை வெற்றிபெறுவது அமெரிக்க மற்றும் அதன் கூட்டணி நாடுகளின் கடந்த பல தசாப்த்த உத்தி. சேர்பியப் போரின் போது சீன தூதரகம் கூட தாக்கப்பட்டிருந்தது.



காசாவில் உள்ள மக்களின் வாழ்விடங்களை அழித்ததும் இஸ்ரேலின் படைத்துறை வியூகமாக கூறப்பட்டது. நேட்டோவின் உதவியுடன் ரஸ்யாவின் எரிசக்தி நிலையங்கள், பொதுமக்களின் வாழ்விடங்களை தாக்கியதும் உக்ரைனின் பேரியல் உத்தியாக கருதப்பட்டது. ஆனால் அதே உத்தியை ரஸ்யா கையில் எடுத்தபோது போரின் போக்கு மாறிவிட்டது.

இன்று ஈரானும் அதே உத்தியை கையில் எடுத்தபோது அமெரிக்கா போரை இழந்துவிட்டது. அதாவது பொருளாதார வீழ்ச்சியை தாங்காது உலகம் சுருண்டுவிட்டது. தற்போது அமெரிக்கா அதில் இருந்து வெளிவருவதற்கான வழிகளைத் தேடுகின்றது. ஈரானின் எரிசக்தி நிலையங்கள் மற்றும் குடிநீர் நிலைகளை தாக்கப்போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப் விடுத்த 48 மணிநேரக் காலக்கெடு தற்போது 5 நாட்களாகி பின்னர் 10 நாட்களாக நீண்டு செல்கின்றது. அதேசமயம், ஈரானுடன் பேச்சுக்களை நடத்த 15 அம்சக் கோரிக்கைகளையும் அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது. ஆனால் ஈரான் அமெரிக்காவின் கோரிக்கைகளை நிராகரித்ததுடன், தமது 5 அம்சக் கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.

அதேசமயம், ஈரானின் தீவுகளைக் கைப்பற்றி ஹார்மூஸ் நீரிணையை திறக்கப்போவதாகவும் அமெரிக்கா எச்சரித்து வருவதுடன், ஏறத்தாள 12,000 சிறப்பு மற்றும் ஈரூடகப் படையினரை மத்திய கிழக்கு பகுதிக்கு அனுப்பியுள்ளது. நோவோஸ்டி” நிறுவன விமானப் பயணத் தரவுகளின் படி அமெரிக்க இராணுவ C-17 குளோப்மாஸ்டர் சரக்கு விமானம் ஐக்கிய அரபு அமீரகப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை(26) இறங்கியுள்ளது. பின்னர், சவுதி அரேபியாவுக்குப் புறப்பட்டுள்ளது. விமானம் டிரான்ஸ்பாண்டரை அணைத்து, அதன் முழுப் பயணப் பாதையையும் மறைத்ததாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இந்த நிகழ்வுகள், “விரைவில் தொடங்கக்கூடிய” ஈரானுக்கு எதிரான அமெரிக்கத் தரைவழி நடவடிக்கை குறித்த திட்டங்கள் பற்றி அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறியுள்ள அறிக்கைகளுடன் ஒத்துப்போகின்றன. என “தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்” தெரிவித்துள்ளது.




ஹோர்முஸ் நீரிணையை வலுக்கட்டாயமாகத் திறப்பதை உறுதிசெய்யும் நோக்கத்தில், வளைகுடாவில் உள்ள ஈரானிய கடற்கரைகள் அல்லது தீவுகள் மீது தரைவழிப் படையெடுப்பை அமெரிக்கா திட்டமிடுவதாக கூறப்படுகின்றது.

ஆனால், வளைகுடாவில் உள்ள ஈரானிய கடற்கரையையோ அல்லது சில தீவுகளையோ ஆக்கிரமிப்பதில் அமெரிக்கா வெற்றி பெற்றால், அதன் பிறகு என்ன திட்டம் அவர்களிடம் உள்ளது? என்பதே இங்குள்ள கேள்வி டிரம்ப் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை பார்க்கும்போது அடுத்து என்ன? என்ற கேள்வியைப் பற்றி ஒருபோதும் அவர்கள் சிந்திப்பதில்லை போல் உள்ளது. இதுவே, 2017-2021 வரையிலான முதல் காலகட்டம் மற்றும் 2025 முதல் இன்றுவரை உள்ள இரண்டாவது காலகட்டம் என, தோல்வியுற்ற போர்களிலும் மோதல்களிலும் அமெரிக்காவை சிக்க வைத்துள்ளது.



அந்தத் தீவுகள் அல்லது கடற்கரையை அவர்கள் என்ன செய்வார்கள். நிரந்தர ஆக்கிரமிப்பா அல்லது தற்காலிகமானதா என்ற தொலைநோக்குப் பார்வை அவர்களிடம் இல்லை. ஈரானிடம் 650,000 படையினரும், 250,000 துணைப்படையினரும் உள்ளனர். அவர்கள் மேலும் ஒரு மில்லியன் படையினரை திரட்ட முடியும். தேவை ஏற்பட்டால் அவர்களின் படையணி 3 மில்லியனை தாண்டும் எனவும் கூறுகின்றனர். அதேசமயம் ஒரு சமச்சீரற்ற் போர் முறைக்கான ஆயுதங்களும் அவர்களிடம் தாராளமாக உள்ளன. ஈரானியப் பெருநிலப்பரப்பிலிருந்து வரும் ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்கள், தீவுகளில் உள்ள அமெரிக்க உபகரணங்களையும் வீரர்களையும் எளிதாகத் தாக்கி அழிக்கும் நிலையில், அவற்றை வைத்து அமெரிக்கா என்ன செய்யும் என்பதே கேள்வி.

உக்ரைன் ரஸ்யப் போரின் போது கருங்கடல் பகுதியில் உள்ள பாம்புத்தீவை இரு தரப்பும் கைப்பற்றி வைத்திருக்க முடியாத நிலையில் அங்கிருந்து பின்வாங்கியதை நாம் அறிவோம். தீவுகளை ஆக்கிரமிப்பது, ஹோர்முஸ்_நீரிணையைத் திறப்பதற்கு உத்தரவாதம் அளிக்குமா என்றால் அதற்கு முதலில், பாப் அல்-மண்டாபில் உள்ள எந்தத் தீவையும் ஹூதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை, ஆனாலும் ஒரு சில ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களைக் கொண்டு அந்த நீரிணையை மூடுவதில் அவர்கள் வெற்றி பெற்றனர் என்ற விபரத்தையும், அந்த சண்டையில் அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பல் 3 எப்-18 விமானங்களை இழந்ததையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவினால் கைப்பற்றப்படும் தீவுகளை விட அமெரிக்காவின் ஒவ்வொரு விமானந்தாங்கிக் கப்பலும் ஆட்பல மற்றும் ஆயுத வசதிகளில் அந்த தீவுகளை விட பெரியவை. ஆனால் அவை கூட ஈரானிய போரில் இருந்து பின்வாங்கியுள்ளன.



கடற்கரையிலிருந்து ஏவப்படும் சில கண்ணிவெடிகள் அல்லது டார்பிடோக்களைக் கொண்டு, 2 மைல் அகலமுள்ள கப்பல் போக்குவரத்து நீர்வழிப்பாதையை மூடுவது மிகவும் எளிது. மேலும், உலகின் படைகள் ஒன்று திரண்டாலும் கூட, உலகில் எந்த நாட்டாலும் 2,400 கி.மீ நீளமுள்ள கடற்கரையை 100% கட்டுப்படுத்த முடியாது.

எண்ணெய் மற்றும் சரக்குக் கப்பல்களுக்கான பாதுகாப்பாக ஒரு போர்க்கப்பலைப் பயன்படுத்துவது, அதை ஈரானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களுக்கு எளிதான இலக்காக மாற்றுவதற்குப் போதுமானது. அதை அவர்கள் எப்போது வேண்டுமானாலும் எளிய ஆயுதங்களைக் கொண்டு அழிக்க முடியும்.

ஈரானியத் தீவுகளை ஆக்கிரமிக்கும் போது டிரம்ப் மற்றும் நெதன்யாகு வளைகுடா நாடுகளைப் பாதுகாப்பார்களா? என்ற கேள்விகளும் உள்ளன. ஈரான் இந்தத் தாக்குதலை முறியடித்து, அதன் தீவுகளை ஆக்கிரமிப்பதையும் தடுத்தால், அது அதன் எதிரிகளின் பலவீனத்தைப் பயன்படுத்தி, சில அரபு நாடுகளை ஆக்கிரமிக்க ஒரு

தொடர்ச்சி: பக்கம் 17

## சாபமா சமூக ... தொடர்ச்சி...

ஏதுமற்ற சடங்களாக, விடியப் பின்னேரமாக கற்பித்தல் செயற்பாடுகளுக்காக வாசல்களில் கொண்டுபோய் விட்டுக் காத்திருப்பது. நாம் வளர்க்கும் பிள்ளைகளின் கையில், நவீன தொழில்நுட்பத்தின் வெளிப்பாடான உயர்ந்த விலை தொலைபேசிகளை கொடுத்து, கண் காணிப்பற்ற சமூக வலைத்தள பாவனைக்கும் இடம் கொடுத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு பெற்றோரும் எழுதி வைத்துக்கொள்வோம்.

எங்களுக்கான பற்றைகள் தனங்கிளப்பில் மட்டு மல்ல, யாழ் மாவட்டம் முழுவதும், ஏன், வன்னி, கிழக்கு மாகாணம், மலையகம், தென்னிலங்கை எங்கும் காத்துக் கிடக்கின்றன.

விழுமியமுள்ள பிள்ளைகளாக வளர்த்தெடுப்பதில் நாம் தவறிழைத்துவிட்டு, பின்னர் ஓடிப்போனார், பிள்ளை பெற்றார், கொலை செய்து குற்றவாளி கூண்டில் நாமே நமது பிள்ளைகளை ஏற்றி வேடிக்கை பார்க்கிறோம்.

ஒவ்வொரு பெற்றோரும், பாடசாலை ஆசிரியர்க ளும், பிள்ளைகள் வாழும் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவு களும் இதையுணர்ந்து, இந்த நொடியிலிருந்து எம் பிள் ளைகள் ஒவ்வொருவரையும் அன்பாக அரவணைத்து, கண்டிப்புடன் சரியான வாழ்வு வாழ வழிகாட்டுவோம்.

அது எங்கள் பிள்ளைகளையும் நடுத் தெருவில் விடாமல் காப்பாற்றும் ஒரே வழிமுறை. தண்டனைகள் அதிகரித்தால் தவறுகள் குறையும். சட்டம் இறுக்கமாக்கப் படாத வரை குற்றங்கள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கும். நீதித்துறை தங்கள் கடமையில் நடுநிலைமையாக நிற்காத வரை தவறுகளும், தறுதலைகளும் உருவாகிக் கொண்டே இருப்பார்கள். நம் நலைமுறையை பாதுகாக்க நாமே பொறுப்புள்ளவர்களாக மாறவேண்டும்.

## எரிபொருளுடன் ... தொடர்ச்சி...

வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்பின் மற்றுமொரு கட்டமாக இந்த எரிபொருள் கையிருப்பு அமைந்துள்ளதாக அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா அமெரிக்காவுக்கு... தொடர்ச்சி...

சுமார் 1.5 மில்லியன் ஷியா மக்கள் வசிக்கின்றனர், இது அப்பகுதியின் மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 10-15% ஆகும். இருப்பினும், ஈரானுக்கான ஆதரவு இப்போது சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் வருகிறது. இதனிடையே, இந்தியாவின் ராஜதந்திர நிலைப்பாடு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப் பதற்காக கூட்டப்பட்ட கூட்டத்தில் பேசிய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், "இந்தப் போர் அனைத்துத் தரப்பினரையும் பாதிப்பதால், அது விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிடம் தெரிவித்துள்ளார்," என்று கூறினார்.

"நாங்கள் ஒரு தரகு நாடு அல்ல," "அமெரிக்காவிற் கும் ஈரானுக்கும் இடையில் பாகிஸ்தான் ஒரு மத்தியஸ் தராக செயல்படுவதாக எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்ட ஒப்பீடுகளை அவர் நிராகரித்தார், 1981 முதல் அமெரிக்கா, தெஹ்ரானுடன் தொடர்ந்து உறவில் இருப்பதற்கு இஸ்லா மாபாத் ஒரு மத்தியஸ்தராகச் செயல்பட்டு வருகிறது என்று ஜெய்சங்கர் கூறினார்.

## ஈரானில் ஒரு நீர்நிலத் ... தொடர்ச்சி...

ஆட்சி வீழ்ந்துவிடும்" என்பது போன்ற நெதன்யாகுவின் கூற்றுகள், சர்ச்சில் மற்றும் ஹாமில்டனின் அறிவிப்புகளை விட அபாயகரமாக எதிரொலிக்கின்றன. தனது சொந்த மண்ணில், வலுவான சித்தாந்த உந்துதலுடன் போராடும் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட ஒரு தேசம், தொழில்நுட்ப மேன்மைக்கு எளிதில் அடிபணியாது என்ற உண்மையை இரு தரப்பினரும் புறக்கணித்தனர். காலி போலிப் போரில் நேச நாடுகளை சேர்ந்த சுமார் 250,000 பேர் உயிரிழந்தனர்; இதில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். மேலும், அது ஒரு அவமானகரமான பின்வாங்கலில் முடிந்தது.

அது, நிலப்பரப்பின் யதார்த்தத்துடனும், தற்காப்ப வர்களின் உறுதியுடனும் மோதியபோது, ஒரு வல்லரசின் ஆணவத்தை அம்பலப்படுத்திய ஒரு படுகொலைக் களமாக இருந்தது. இன்று ஈரானில் நிகழக்கூடிய எந்தவொரு நீர்நிலத் தரையிறக்கமும், ஒரு பாரசீக காலிபோலியாக மாறும் அதே அபாயத்தைக் கொண்டுள்ளது: அதாவது, தொழில்நுட்பத்தின் மீதான அதீத நம்பிக்கை, கடக்க முடியாத புவியியல் அமைப்பு, பெருந்திரளான ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள், மற்றும் சொந்த மண்ணில் போராடுபவர்களின் மிகப்பெரிய அனுகூலம் ஆகியவற்று டன் மோதுகிறது. ஈரான் என்பது ஒரு பன்முனை உலகின் தொடக்கப் போராகும்; இந்த யதார்த்தத்தை அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஒருவேளை முழு மேற்கத்திய நாடுகளும் இன்னும் அங்கீகரிக்கத் தவறுகின்றன.

## எமது மண் தியாகங்க ... தொடர்ச்சி...

மேடையில் அவர் நிகழ்த்திய அந்த அபாரமான நடனம், வெறும் கலைநிகழ்ச்சி மட்டுமல்ல; அது ஒரு இனத்தின் எழுச்சிக் குரல்.

எத்தனையோ இழப்புகள், எத்தனையோ வலிகள், சர்வதேச ரீதியாக எமக்கு எதிராகக் கட்டப்பட்ட எத்தனையோ தடைகள்... அத்தனையையும் தாண்டி எமது இனம் இன்னும் நிமிர்ந்து நிற்கிறது என்றால், அதற்குத் தம்பி ரஜீவன் போன்ற இளைஞர்களின் தளராத மன உறுதியே காரணம்.

சுதாஸ் ரஜீவன் இன்று ஒற்றைக் காலால் ஆடிய நடனம் எமக்கு ஒரு செய்தியைச் சொல்கிறது: 'உறுப்புக்கள் இழக்கப்படலாம், ஆனால் உறுதி என்றும் இழக்கப்படக் கூடாது.' இந்தச் சமூகத்திற்கு நான் சொல்ல விரும்புவது இதுதான்.

குறைகளைச் சொல்லி முடங்கிக் கிடப்பவர்களுக்கு மத்தியில், இருப்பதை வைத்துச் சிகரம் தொட முடியும் என்று நிரூபித்திருக்கும் ரஜீவன் ஒரு சிறந்த முன்மாதிரி. எமது இளைஞர் கள் சவால்களைக் கண்டு அஞ்சக் கூடாது. போராட்டக் களமாக இருந்தாலும் சரி, கலை மேடையாக இருந்தாலும் சரி, தளராத முனைப்பும் பயிற்சியும் இருந்தால் எம்மால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இந்த மேடையே சாட்சி." எனத் தெரிவித்தார்.

## அமெரிக்காவின் இறுதிப் ... தொடர்ச்சி...

சந்தர்ப்பத்தை ஈரானுக்கு வழங்கிவிடும்.

மேலும் வளைகுடாவில் உள்ள அமெரிக்கத் தளங் களுக்குள் தன்னைத் தற்காத்துக் கொள்வதில் அமெரிக்கா வெற்றி பெற்றதா என்றால் இல்லை. அங்குள்ள தளங்கள் முழுவதும் வெற்றிடமாகவே உள்ளன. வீரர்கள் தப்பி ஓடி, தளங்களைக் காலி செய்துவிட்டார்கள். அப்படியானால், ஈரானின் தீவுகளையோ அல்லது ஈரானிய பகுதியையோ ஆக்கிரமிப்பும் செய்தால், ஈரானியத் தாக்குதல்களால் வெறும் 24 மணி நேரத்திலேயே அமெரிக்க வீரர்கள் தப்பி ஓடுவார்கள் என்றுதானே அர்த்தம்.

அதாவது இந்த தரையிறக்கத்தை அமெரிக்கா மேற்கொண்டால் பெரும்பாலும் அது ஒரு இறுதி மற்றும் திருப்புமுனையான போராக இருக்கும், அதில் இருந்து ஆக்கிரமிப்புப் படைகள் சேதமின்றி வெளிவருவது கடின மாக இருக்கும்.







## வெளிநாட்டு தூதர் ... தொடர்ச்சி...

மூலோபாய ரீதியான ஈடுபாடுகளின் ஊடாக, சர்வதேச ரீதியில் இலங்கையைப் பற்றிய நேர்மறையான மற்றும் நம்பகமான பிம்பத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் ஒத்துப்போகக்கூடிய, குறிப்பாகப் பேண்தகு நிலை, புத்தாக்கம் மற்றும் நீண்டகாலப் பெறுமதியினை அதிகரிக்கச் செய்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட துறைகளில் உயரிய முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றை இலங்கைக்குக் கொண்டுவர அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு தூதுக்குழுத் தலைவர்களைப் பிரதமர் ஊக்கப்படுத்தினார்.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை ஊக்குவித்தல் மற்றும் பன்முகப்படுத்துதல், புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிதல் மற்றும் வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்துதல் ஆகியவற்றுக்கும் இச்சந்திப்பின்போது விசேட முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் பிரதமரின் செயலாளர், பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி சாகரிகா போகஹவத்த மற்றும் நியமனம் பெற்ற தூதுக்குழுத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஈழத்தமிழர் பிரச்சனை ... தொடர்ச்சி...

நிலையிலிருந்து மாற்றி அவர்களைச் சமூக ரீதியாக ஒருங்கிணைக்கப் பின்வரும் திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன:

* சட்டபூர்வ அந்தஸ்து மாற்றம்: ஈழத்தமிழர்களை"சட்டவிரோதக் குடியேறிகள்" என்று அழைப்பதைத் தவிர்த்து, அவர்களுக்கு முறையான அகதி அந்தஸ்து அல்லது குடியுரிமை வழங்கப் போராடுவதாக NTK கூறுகிறது.

* சமத்துவ உரிமை: திபெத்திய அல்லது மியான்மர் அகதிகளுக்கு வழங்கப்படும் உரிமைகளுடன் ஒப்பிடுகையில், ஈழத்தமிழர்களுக்கு உயர்கல்வி மற்றும் சொத்துரிமை மறுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் சம வாய்ப்புகளைப் பெற்றுத்தரத் திட்டமிடுகிறது.

* இந்தியாவிலேயே பிறந்த தலைமுறை: தமிழகத்தில் பிறந்துவளர்ந்த 40 விழுக்காடு ஈழத்தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான சட்டப்போராட்டங்களை முன்னெடுப்பதாகத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

4. நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் அதிகாரப் பரவலாக்கம்

சென்னையில் நிலவும் நெருக்கடியைக் குறைக்கவும், மாநிலம்முழுவதும் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்யவும்

5 "செயற்பாட்டுத் தலைநகரங்களை" (Functional Capitals) உருவாக்க NTK திட்டமிடுகிறது:

* நிர்வாகத்திற்கு சென்னை, சட்டமன்றத்திற்கு திருச்சி, கலாச்சாரம் மற்றும் நீதித்துறைக்கு மதுரை, தொழில் மற்றும்வணிகத்திற்கு கோயம்புத்தூர், சுற்றுலா மற்றும் கடல்சார்மேலாண்மைக்கு கன்னியாகுமரி எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

* ஈழத்தமிழர் விவகாரத்துடன் நெருங்கிய தொடர்புள்ள தென்தமிழக மற்றும் கடலோரப் பகுதிகளை மேம்படுத்த இந்த நிர்வாக மாதிரி உதவும் என்று கட்சி கருதுகிறது.

பிற அரசியல் கட்சிகளின் 2026 தேர்தல் வாக்குறுதிகள்: ஒரு ஒப்பீடு

பிற முதன்மையான கட்சிகளும் ஈழத்தமிழ் அகதிகள்தொடர்பாகத் தங்களது திட்டங்களை அறிவித்துள்ளன:

* திமுக (DMK): தமிழகத்தில் நீண்டகாலமாக வாழும் ஈழத்தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப் படவேண்டும் அல்லது குறைந்தபட்சம் நீண்டகால விசாக்களாவது(Long-term Visas) வழங்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

* அதிமுக (AIADMK): தனது 2026 தேர்தல் அறிக்கையில் ஈழத்தமிழர்களுக்கு "இரட்டைக் குடியுரிமை" (Dual Citizenship) வழங்க மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

* தமிழக வாழ்வுரிமை கட்சி: கடவுச்சீட்டு சட்டத்தின் கீழ் கைதான ஈழத்தமிழர்களை விடுதலை செய்து அவர்களை மீண்டும் தாயகம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதெரிவித்துள்ளது.

இலங்கையில்2025ஆம்ஆண்டுஏற்பட்டஆட்சிமாற்றத்திற்குப் பிறகு, தமிழகத்திலுள்ள அகதிகள் திரும்புவது குறித்த விவாதங்கள் தொடங்கியுள்ளன. அதிபர் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான அரசு, இந்தியாவில் உள்ள அகதிகளைத் தங்களது அரசு வரவேற்கத் தயாராக இருப்பதாகவும், அவர்களுக்குத் தேவையான மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. 2025 ஜூலை முதல் 2026 பிப்ரவரி வரையிலான காலப்பகுதியில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 246 நபர்கள் தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பியுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளின் விவகாரம் என்பதுமத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டைத் தேடுகிறது. 2025 ஆம் ஆண்டின் விலக்கு ஆணை தற்காலிக நிம்மதியை வழங்கினாலும், இந்தியாவிலேயே பிறந்த அகதிகளுக்குக் குடியுரிமை வழங்குவதற்கான நிரந்தர சட்டப்பூர்வமான பாதையைஉருவாக்க வேண்டும். நாம் தமிழர் கட்சி முன்வைக்கும் சர்வதேச நீதி, மூலோபாயக் கட்டமைப்பு மற்றும் பொருளாதார தற்சார்பு திட்டங்கள், ஈழத்தமிழர் விவகாரத்தை ஒருஉணர்வுப்பூர்வமான விவகாரமாக மட்டுமன்றி, உலகத்தமிழினத்தின் உரிமை சார்ந்த சர்வதேசப் பிரச்சினையாகவும் முன்னிறுத்துகின்றன. 2026 தேர்தலில் வெற்றி பெறும் கட்சி, இவர்களின் சமூக-பொருளாதார உரிமைகளை உறுதி செய்து அவர்களைச் சமூகத்தின் ஒரு அங்கமாக ஒருங்கிணைப்பதற்கான திட்டங்களைச் செயற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

• • •

## பிரித்தானியாவில் ... தொடர்ச்சி...

மற்றும் பொறுப்புக்கூறலில் கவனம் செலுத்துவதாகவும் உறுதியளித்தார்.

"நமது சொந்த கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் சமூகங்களில் உள்ளவர்களின் செயல்கள், செயலற்ற தன்மை மற்றும் தோல்விகளால் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவிக்கும் வலியை நாம் புறக்கணிக்கவோ அல்லது குறைத்து மதிப்பிடவோ கூடாது," என்று அவர் கூறினார்.

புதிய பேராயரின் முன்னோடியான ஜஸ்டின் வெல்பி, 1970கள் மற்றும் 1980கள் முழுவதும் இங்கிலாந்து மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள திருச்சபைக்குள் செல்வாக்கு மிக்க வழக்கறிஞர் ஜான் ஸ்மித் செய்த தொடர் பாலியல் துஷ்பிரயோகங்களை மூடிமறைத்ததைக் கையாண்ட விதம் குறித்த விமர்சனங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து பதவி விலகினார்.

பிரிட்டனில் கர்ப்பத்தின் இறுதிக்கட்டத்தில் கருக்கலைப்பு செய்வதைக் குற்றமற்றதாக்கும் நாடாளுமன்ற மசோதாவுக்கு எதிராகப் போதுமான வலுவான நிலைப்பாட்டை எடுக்கத் தவறியதாகச் சிலர் கருதியதால், முல்லாலி சமீபத்தில் ஊடக விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளார். தற்போது, பிரிட்டனில் உள்ள பெண்கள் சில விதிவிலக்குகளுடன், கர்ப்பத்தின் 24 வாரங்கள் வரை கருக்கலைப்பு செய்துகொள்ளலாம்.

இந்த மசோதா தற்போது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் மேலவையில் விவாதிக்கப்பட்டு வருகிறது. கேன்டர்பரியின் பேராயர்கள் வரலாற்று ரீதியாக இருந்ததை விட அரசியல் செல்வாக்கு குறைந்திருந்தாலும், அவர்கள் மற்ற மூத்த ஆயர்களுடன் பிரபுக்கள் சபையில் ஓர் இடத்தைப் பெற்றுள்ளனர் மற்றும் சட்டங்களை இயற்றுவதில் ஈடுபட்டுள்ளனர்.

## ஐ.நா. பிரதிநிதி ... தொடர்ச்சி...

ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜை சந்தித்து யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய மனித உரிமை நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் மனித உரிமைகள் உத்தியோகத்தர் சேவியர் குமுதினியும் கலந்துகொண்டார்.

## வரலாறு காணாத... தொடர்ச்சி...

தொடங்கியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம் தொழில்மய நீக்கத்தை எதிர்கொள்கிறது, பிரிட்டனுக்கு "பெரிய பிரச்சினைகள்" காத்திருக்கின்றன. இது, ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் பிற "ரஷ்ய வெறுப்பு அரசியல்வாதிகள்" எடுத்த முடிவுகளின் விளைவு.

மேற்கத்திய அரசாங்கங்கள் இறுதியில் ரஷ்ய எரிசக்திக்கான அணுகலை மீண்டும் நாட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகும். ஈரான் போர் எரிசக்தி சந்தைகளை உலுக்கியதால், ரஷ்ய எண்ணெய் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் ஒத்திவைத்தது என தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலியத் தாக்குதல்கள் மற்றும் அதைத் தொடர்ந்து பிராந்தியம் முழுவதும் ஈரான் நடத்திய பதிலடித் தாக்குதல்களால் தூண்டப்பட்ட மத்திய கிழக்கு மோதல் தீவிரமடைந்ததிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. இந்தத் தாக்குதல்கள், மேற்கத்திய கப்பல் போக்குவரத்திற்காக ஹார்முஸ் ஜலசந்தியை திறம்பட மூடுவதற்கு வழிவகுத்தன.

இந்த நீர்வழிப்பாதை பொதுவாக உலகின் தினசரி எண்ணெய் விநியோகத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டு செல்கிறது, மேலும் இதில் ஏற்படும் தடைகள் மாதங்கள் அல்லது ஆண்டுகள் நீடிக்கக்கூடும் என்று சர்வதேச எரிசக்தி முகமை (IEA) எச்சரித்துள்ளது. மார்ச் 1 முதல் ஐரோப்பிய எரிவாயு விலைகள் சுமார் 70% உயர்ந்துள்ளன; பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய்க்கு $110-ஐத் தாண்டியுள்ளது, இது ரஷ்ய எண்ணெய் மீதான தடைகளைத் தளர்த்த வாஷிங்டனைத் தூண்டியுள்ளது.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்






